புதன்பொய்கை

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 84

புதன்கிழமை
18 பெப்ரவரி 2026

மாசி 06 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2057

பக்கங்கள் – 16
விலை – ரூபா 50



# மாகாணத் தேர்தல் இந்தியா மௌனம்

## எதுவுமே பேசவில்லை என ரில்வின் சில்வா தெரிவிப்பு

**கொழும்பு, பெப்ரவரி 18**

**மாகாணசபைத் தேர்தல்கள் தொடர்பில் தன்னுடன் இந்தியா எதுவுமே பேசவில்லை என்றும், தானும் எதுவும் கூற வில்லை எனவும் தேசிய மக்கள் அரசாங்கத்தின் கொள்கை வகுப் பாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.**

»15

நாடாளுமன்ற உறுப்பினர்களின்

## ஒய்வூதியத்தை நீக்கும் சட்டவரைவு நிறைவேற்றம்

கொழும்பு, பெப். 18
நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஒய்வூதியத்தை நீக் கும் சட்டவரைவு 152 மேலதிக வாக்கு களால் நேற்று நிறைவேற்றப்பட்டது.

»15

இராணுவத்தினர் மீதான தடை

## பிரிட்டனின் துணைப்பிரதமருடன் எதுவுமே பேசவில்லையாம்

அமைச்சர் விஜித ஹேரத் தெரிவிப்பு

கொழும்பு, பெப். 18
ஸ்ரீலங்காப் படையினர் மீதான தடைகள் தொடர் பில், பிரிட்டனின் துணைப் பிரதமருடன் பேசவில்லை என, வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத்

»15

வடமராட்சி

## சுண்டிக்குளம் படுகொலைகள்; நினைவேந்தல் நிகழ்வு இன்று!



யாழ்ப்பாணம், செப். 18
வடமராட்சி சுண்டிக்குளம் தொடுவாய் வாய்க் கால் பகுதியில் ஸ்ரீலங்கா கடற்படையால் படுகொலை செய்யப்பட்டவர்களின் 22ஆவது நினைவேந்தல் நிகழ்வு இன்று கடைப்பிடிக்கப்படவுள்ளது. 1994ஆம் ஆண்டு

»15

இனிவரும் காலங்களில்

## யாழ். கோட்டைப் பகுதியில் கட்டடம் அமைக்கத் தடை!

யாழ். மாநகரசபை தீர்மானம்

யாழ்ப்பாணம், பெப். 18
யாழ்ப்பாணம் கோட்டைப் பகுதியில் இனிவரும் காலங்களில் புதிய கட்டடங் கள் அமைப்பதற்கு தடை விதிக்க வேண்டும் என வும், முற்றவெளியை யாழ்ப்பாணம் மாநகர சபையின் ஆளுகை

»15

## கொலை அச்சுறுத்தல்கள்: குற்றவாளிக்குக் கடூழியம்!

கிளிநொச்சி நீதிமன்றம் அதிரடி

விரிவு பக்கம்:- 11

முச்சந்தி முரளி

"நடக்காத தீர்மானங்களைப் போடுறதை விட்டிட்டு உருப்படியான வேலையைப் பாக்கமாட்டினமோ உவையள்?"

## சாவு வீட்டுக்குச் சென்றவர் திடீர் சுகவீனமுற்றுப் பலி!

நுணாவிலில் துயரம்

## இருதய நோயால் பெண் சிசு சாவு!

விரிவுகள் பக்கம்:- 11

யாழ். பல்கலைக்கழக பட்டமளிப்பு

## ஒருவழிப் பாதையாக இராமநாதன் வீதி

யாழ்ப்பாணம், பெப். 18
யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் 40ஆவது பட்ட மளிப்பு விழாவை முன் னிட்டு, இராமநாதன் வீதி யின் ஒருபகுதி ஒருவழிப் பாதையாக மாற்றப்பட் டுள்ளது.
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் பட்டமளிப்பு விழா நாளை தொடக்கம் எதிர்வரும் 22ஆம் திகதி வரை நடை பெறவுள்ளது.

»15

## விபத்தில் ஒருவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், பெப். 18
இரண்டு மோட்டார்சைக் கிள்கள் மோதுண்டதில் படுகாயம் அடைந்த குடும்பத் தலைவர்.

»15




மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**கொவிசெத**
திகதி 17.02.2026
சீட்டிழுப்பு இலக்கம் 4350
ஆங்கில எழுத்து B
வெற்றி இலக்கங்கள் 29 36 52 79
விசேட எழுத்து B

**ஹந்தஹண ராசி சுப பலன்**
திகதி 17.02.2026
சீட்டிழுப்பு இலக்கம் 1417
வெற்றி இலக்கினம் துலாம்
வெற்றி இலக்கங்கள் 06 18 27 52

**NLB ஜய**
திகதி 17.02.2026
சீட்டிழுப்பு இலக்கம் 0376
ஆங்கில எழுத்து X
வெற்றி இலக்கங்கள் 0 3 6 1

**மெகா பவர்**
திகதி 17.02.2026
சீட்டிழுப்பு இலக்கம் 2456
ஆங்கில எழுத்து V
சுப்பர் இலக்கம் 21
வெற்றி இலக்கங்கள் 31 50 73 77

**மஹஜன சம்பத**
திகதி 17.02.2026
சீட்டிழுப்பு இலக்கம் 6108
ஆங்கில எழுத்து K
வெற்றி இலக்கங்கள் 7 2 1 3 0 9

**தன நிதானய**
திகதி 17.02.2026
சீட்டிழுப்பு இலக்கம் 2138
ஆங்கில எழுத்து Z
வெற்றி இலக்கங்கள் 28 33 51 63
விசேட எழுத்து Z

**சுப தவசக்**
திகதி 17.02.2026
சீட்டிழுப்பு இலக்கம் 0224
வெற்றி இலக்கினம் கடகம்
வெற்றி இலக்கங்கள் 29 31 65

# பெரும்போக நெல் கொள்வனவு புதிய விலைகள் அறிவிப்பு!

கொழும்பு, பெப்.18

**2025-2026 பெரும்போக நெல் கொள்வனவு வேலைத்திட்டத்துக்க மைய உரிய விலைகளை அரசாங்கம் அறிவித்துள்ளது.**

அதற்கமைய ஒரு கிலோகிராம் கீரிச்சம்பா நெல் 140 ரூபாவாகவும், ஒரு கிலோகிராம் சம்பா நெல் 130 ரூபாவாகவும், ஒரு கிலோகிராம் நாடு நெல் 120 ரூபாவாகவும் கொள்வனவு செய்யப்படவுள்ளது. இம்முறை நெல் கொள்வனவுக்காக 10 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் நெல் சந்தைப்படுத்தல் சபையின் தலைவர் ஏ.எம்.யூ. பின்னலந்த தெரிவித்துள்ளார். (ச-இ)

**சுபிரி தன சம்பத**
திகதி 17.02.2026 தினம் செவ்வாய்க்கிழமை
வெற்றி வாரம் 0816
ஆங்கில எழுத்து F
வெற்றி இலக்கம் 9 5 2 3 1 9

**Super Ball**
திகதி 17.02.2026 தினம் செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு வாரம் 3082
ஆங்கில எழுத்து W
வெற்றி இலக்கம் 04 14 51 74

**சனிதா**
திகதி 17.02.2026 தினம் செவ்வாய்க்கிழமை
ஆங்கில எழுத்து F
வெற்றி இலக்கம் 29 32 42 73
வெற்றி வாரம் 5243

**SASIRI**
திகதி 17.02.2026 தினம் செவ்வாய்க்கிழமை
வெற்றி வாரம் 0912
வெற்றி இலக்கம் 08 10 33

**லக்ன ராசி**
திகதி 17.02.2026 தினம் செவ்வாய்க்கிழமை
மிதுனம்
வெற்றி இலக்கம் 04 07 09 52
சீட்டிழுப்பு வாரம் 4794

**KAPRUKA**
திகதி 17.02.2026 தினம் செவ்வாய்க்கிழமை
ஆங்கில எழுத்து Q
சுப்பர் இலக்கம் 22
வெற்றி இலக்கம் 06 16 41 52
வெற்றி வாரம் 2258

**அத கோடிபதி**
திகதி 17.02.2026 தினம் செவ்வாய்க்கிழமை
ஆங்கில எழுத்து F
வெற்றி இலக்கம் 03 17 54 69
வெற்றி வாரம் 2908

## யானை தாக்கியதில் வெளிநாட்டவர் சாவு

கொழும்பு, பெப்.17

சிகிரியா, பிதுரங்கல வீதியில் யானை ஒன்று தாக்கியதில் வெளிநாட்டுப் பிரஜை ஒருவர் உயிரிழந்துள்ளார். உயிரிழந்தவர் 68 வயதுடைய ஹங்கேரி நாட்டுப் பிரஜை என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

குறித்த நபரும் அவரது மனைவியும் சிகிரியா பிதுரங்கல வீதியில் நடந்து சென்று கொண்டிருந்த போதே யானைத் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளமை ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (ச-இ)

பணம், நகை மோசடி:

## பெண்ணொருவர் மீது பொலிஸில் முறைப்பாடு

யாழ்ப்பாணம், பெப். 18

அச்சுவேலி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஆவரங்கால் பகுதியில், பணம் மற்றும் நகை மோசடியில் ஈடுபட்ட பெண்ணொருவர் தொடர்பில் பொலிஸாரிடம் முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:

அச்சுவேலி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஆவரங்கால் பகுதியில் வசிக்கும் பெண்ணொருவர் பலரை வைத்து வங்கிகளில் புணத்தைப் பெற்றுள்ளார். எனினும், உரிய தவணைக் கட்டணங்களைச் செலுத்தாமல் இழுத்தடித்து வந்துள்ளார். அத்துடன், பலரிடம் இருந்து நகைகளைப் பெற்று அடமானம் வைத்த போதிலும் அதை உரியவாறு மீட்டுக்கொடுக்கவில்லை என்றும் கூறப்படுகின்றது. இதையடுத்தே, அந்தப் பெண்ணுக்கு எதிராக அச்சுவேலி பொலிஸாரிடம் நேற்றுமுன்தினம் ஐந்துக்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் வழங்கப்பட்டுள்ளன.

அந்த முறைப்பாடுகளுக்கு அமைய மல்லாகம் நீதிமன்றத்தின் ஊடாகச் சட்ட நடவடிக்கை எடுப்பதற்குப் பொலிஸார் தீர்மானித்துள்ளனர். (ம-23)

## போதையில் சாரத்தியம்; பொலிஸார் நடவடிக்கை

யாழ்ப்பாணம், பெப். 18

போதையில் வாகனம் செலுத்தியவர்களுக்கு எதிராக 5 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன என்று அச்சுவேலி போக்குவரத்துப் பொலிஸார் தெரிவித்தனர்.

போதையில் வாகனம் செலுத்தும் நபர்களைக் கைதுசெய்வதற்காக அச்சுவேலிப் பொலிஸார் விசேட நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தனர். இதன்போதே, கடந்த ஞாயிற்றுக்கிழமை ஐந்து பேர் கைதுசெய்யப்பட்டு வழக்குத் தொடரப்பட்டது. இந்த வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது ஒவ்வொருவருக்கும் தலா 25 ஆயிரம் ரூபா வீதம் தண்டம் விதிக்கப்பட்டது. (ம-23)

## முச்சக்கரவண்டியில் திடீரெனத் தீப்பரவல்

யாழ்ப்பாணம், பெப்.18

வீதியில் பயணித்துக் கொண்டிருந்த முச்சக்கரவண்டியொன்று, திடீரெனத் தீப்பற்றி எரிந்துள்ளது. எனினும் சாரதி மற்றும் முச்சக்கரவண்டியில் பயணித்தவர்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை. இந்தச் சம்பவம் வடமராட்சி பருத்தித்துறை மருதங்கேணி வீதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. பயணிகளை ஏற்றிக்கொண்டு சென்று கொண்டிருந்த முச்சக்கர வண்டி, வல்லிபுர ஆழ்வார் ஆலயத்துக்கு அண்மித்த பகுதியில் திடீரெனத் தீப்பற்றியுள்ளது.



வீதியால் பயணித்தவர்கள், முச்சக்கரவண்டியின் தீப்பரவலைக் கட்டுப்படுத்தினர். சம்பவம்தொடர்பில் பருத்தித்துறைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டனர். (சு-66)

## எரிவாயு சிலிண்டர்களுக்கு வவுனியாவில் தட்டுப்பாடு!

வவுனியா, பெப்.18




வவுனியா மாவட்டத்தில் கடந்த சில நாள்களாக லிட்ரோ சமையல் எரிவாயு சிலிண்டர்களுக்கு கடுமையான தட்டுப்பாடு நிலவிவருவதாக பொது மக்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்தசனிக்கிழமைமுதல் இந்த நிலைமை தொடர்வதாகவும், மாவட்டத்தில் உள்ள பெரும்பாலான விநியோகஸ்தர்களிடம் சிலிண்டர்கள் முழுமையாகத் தீர்ந்துவிட்டதாகவும் விற்பனையாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். விநியோகஸ்தர்களுக்கு எரிவாயுவை ஏற்றி வரும் லொறிகள் இன்னும் வவுனியாவை வந்தடையவில்லை என்றும் எதிர் வரும் நாள்களில் எரிவாயு விநியோகம் வழமைக்குத் திரும்பும் என்றும் விற்பனையாளர்களால் தெரிவிக்கப்படுகின்றது. (ச-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# புதிய பயங்கரவாதத் தடைச்சட்டம்; ஐ.நா. அறிக்கையாளர்கள் அதிருப்தி

கொழும்பு, பெப்.18

அரசாங்கத்தால் முன்மொழியப்பட்டிருக்கும் பயங்கரவாதத்திலிருந்து அரசாங்கத்தைப் பாதுகாக்கும் சட்டவரைவு சர்வதேச சட்டங்களுக்கு முழுவதும் ஏற்புடைய விதத்தில் அமையவில்லை என்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் விசேட அறிக்கையாளர்கள் ஏழு பேர் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவிடம் கடிதம் மூலம் கூட்டாகத் தமது கரிசனையை வெளிப்படுத்தியுள்ளனர்.

இந்தப் புதிய வரைவு எவ்வாறு சர்வதேசச் சட்டங்களுக்கு உட்பட்டதாகக் காணப்படுகிறது என்பது தொடர்பாகவும், இந்த வரைவு தொடர்பாக பொதுக்கலந்துரையாடல் செயன்முறை சகலரையும் உள்ளடக்கியதும், வெளிப்படைத்தன்மை வாய்ந்ததுமான முறையில் அமைவதற்கு முன்னெடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பாக விளக்கவேண்டும் என்றும் அவர்கள் ஜனாதிபதியிடம் கோரியுள்ளனர். (எ-இ)

## இலங்கைச் சிறைகளில் 817 மரணதண்டனைக் கைதிகள்

கொழும்பு, பெப்.18

இலங்கைச் சிறைச்சாலைகளில் மரண தண்டனை மற்றும் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட கைதிகள் மொத்தம் 817 பேர் உள்ளனர் என்று நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சு தெரிவித்துள்ளது.

இதில் உள்நாட்டுப் பிரஜைகள் 811 பேரும் வெளிநாட்டுப் பிரஜைகள் 5 பேரும் அடங்குகின்றனர். இலங்கையில் 1976ஆம் ஆண்டுக்குப் பின்னர் மரண தண்டனைத் தீர்ப்பு நடைமுறைப்படுத்தப்படவில்லை. மாற்றாக, மரண தண்டனைக் கைதிகளுக்கு அது ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்படுவது அல்லது அவர்கள் தொடர்ச்சியாகச் சிறையில் வைக்கப்படுவது வழக்கமாகவுள்ளது. (ச-இ)



## வங்கிகளில் அதிக வட்டி; 1935க்கு முறையிடலாம்

கொழும்பு, பெப்.18

இலங்கை மத்திய வங்கியால் நிர்ணயிக்கப்பட்டுள்ள வட்டி விகிதங்களை விட, வணிக வங்கிகள் அதிக வட்டி விகிதங்களை வாடிக்கையாளர்களிடம் வசூலித்தால் 1935 என்ற இலக்கத்துக்குத் தொடர்புகொண்டு வாடிக்கையாளர்கள் தங்களது முறைப்பாடுகளைப் பதிவுசெய்யலாம் என்று மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

எந்தவொரு வணிக வங்கியும் அதிக வட்டி விகிதத்தை வசூலிக்கும் பட்சத்தில், அந்த வங்கியைத் தவிர்த்துவிட்டு வேறு வங்கியைத் தேர்வு செய்யும் முழுச் சுதந்திரம் வாடிக்கையாளர்களுக்கு இருக்கின்றது. இலங்கை மத்திய வங்கி, கடந்த 2025ஆம் ஆண்டு மற்றும் நடப்பு 2026ஆம் ஆண்டின் இதுவரையிலான காலப்பகுதியிலும் தனது தளர்வான நாணயக்கொள்கை நிலைப்பாட்டைத் தொடர்ந்து பேணி வருகிறது. 2025ஆம் ஆண்டு மே மாதம் 25 அடிப்படைப் புள்ளிகளால் குறைக்கப்பட்டு 7.75 சதவீதமாக நிர்ணயிக்கப்பட்ட வட்டி விகிதமே, தற்போது வரை அதே நிலையில் பேணப்பட்டுவருகின்றது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## 50 தொன் பேரீச்சம்பழங்கள் இலங்கைக்கு அன்பளிப்பு




கொழும்பு, பெப்.18

சவூதி அரசாங்கம் 50 தொன் பேரீச்சம்பழங்களை மனிதாபிமான உதவி மற்றும் நிவாரண மையத்தின் ஊடாக இலங்கைக்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

அவற்றை இலங்கை மத மற்றும் கலாசார அலுவல்களுக்கான துணை அமைச்சர் முனீர் முலவ்பரிடம் இலங்கைக்கான சவூதி அரேபியத் தூதுவர் உத்தியோகபூர்வமாகக் கையளித்துள்ளார். (ச-இ)

## ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியாக பிரபாத்



கொழும்பு, பெப்.18

ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியாக பிரபாத் சந்திர கீர்த்தி நியமிக்கப்பட்டுள்ளார்.

இதற்கானநியமனக்கடிதத்தை ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க நேற்றுமுன்தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து அவரிடம் கையளித்தார். பிரபாத் சந்திர கீர்த்தி இதற்கு முன்னர் அரச துறையில் பல்வேறு முக்கியமான பதவிகளை வகித்துள்ளார். (ச-இ)

## இந்தியா–பாகிஸ்தான் போட்டி: 25 ஜெட் விமானங்கள் வருகை

கொழும்பு, பெப்.18

ரி-20 உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரின் இந்தியா-பாகிஸ்தான் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை இலங்கையில் நடைபெற்ற நிலையில் சுமார் 25 தனியார் ஜெட் விமானங்கள் நாட்டுக்கு வந்துள்ளன.

அத்துடன் விமானப் பயணச் சீட்டுகளின் சராசரி விலை சுமார் 500 வீதமாக அதிகரித்துள்ளது. அதாவது, வழமையாக 16 ஆயிரம் ரூபா விலையில் இருக்கும் விமானப் பயணச்சீட்டு ஒரு இலட்சத்து 10 ஆயிரம் ரூபாவாக அதிகரித்திருந்தது. நாட்டுக்கு வந்திருந்த தனியார் ஜெட் விமானங்களில் 80 வீதத்துக்கும் அதிகமானவை இந்திய பொலிவூட் நட்சத்திரங்கள் மற்றும் கோடீஸ் [illegible] (ச-இ)

## புறா.. புறா... கடத்தல் புறா..! - 2

குறிகாட்டுவானில பிடிபட்டவரில ஒருத்தர், 'நேவி வீட்ட வரப்போகுது' எண்டு போனில தகவல் குடுத்திட்டார். அதால தங்கட வீட்டை கடத்திக்கொண்டந்த புறாக்களைப் பதுக்கிவைச்சவைக்கு என்ன செய்யிறதெண்டு தெரியேலை. நேவி வந்து புறாவோட தங்களைப் பிடிச்சால், எங்க இருந்து புறாக்களைக் கொண்டந்தவை? ஆர் கொண்டந்தது? எங்க குடுக்கப் போயினம்? எண்ட விசயங்கள் எல்லாம் வெளியில வந்திடும் எண்ட பயத்தில, ஒரு மொக்குத்தனமான, எளிய வேலையொண்டை வீட்டில நிண்டவை செய்திருக்கினம், புறாக்களை அடைச்சு வைச்ச கூட்டுக்குள்ள பெற்றோலை ஊத்தி, நெருப்பு வைச்சதுதான் அந்தக் கேடுகெட்ட வேலை. பேசாமல் கூட்டைத் திறந்திருந்தால், அந்தப் புறாக்கள் எங்கையாவது பறந்துபோயிருக்குங்கள். நேவியும் பிடிச்சிருக்கேலாது. தடயமும் இருந்திருக்காது. ஆனால் எரிச்ச தடயம் இருக்குமெண்டது அவைக்கு விளங்கேலை. அதோட நெருப்புப் பட்டுக் கூடு திறந்ததால, அதுக்க நிண்ட புறாக்களில அரைவாசிக்கும் மேல பறந்து தப்பிட்டுதுகளாம். அதுக்குப் பிறகுதான் நேவிக்காரர் அங்கபோய், எரிஞ்ச கூட்டையும் ஆக்களையும் பிடிச்சிருக்கினம்.

ஆனால் இன்னமும் அப்பிடிப் பிடிபட்டவையை பொலிஸிட்ட குடுக்கேலை. பிடிச்சவையை விட்டிட்டினம் எண்டும் கதை. இந்தப் புறாக்களை வளர்க்கிறதுக்கு கொண்டந்திருந்தாலோ, இல்லாட்டி பந்தயத்துக்குப் பறக்க விடுறதுக்குக் கொண்டந்திருந்தாலோ இப்பிடி அதுகளை எரிச்சிருக்கத் தேவையில்லை எண்டு அங்கத்தைச் சனம் சொல்லுகினம். அதைவிட அவை சொன்ன இன்னொரு தகவலைக் கேக்க பகீர் எண்டு இருந்திச்சுது. இந்தப் புறாக்கள் ஒரு ஆளின்ர ஓர்டருக்குத்தான் கட்டுப்பட்டு அதின்படி பறக்கக்கூடியவை. அதிலும் இருநூறு முந்நூறு கிலோமீற்றர் தூரம் களைக்காமல் பறந்துபோய் சொன்ன இடத்தில நிக்குமாம். அப்பிடி எங்க இருந்து போகவேணும்,எங்க இறங்கவேணும் எண்டு பழக்கிப்போட்டு, புறாக்களின்ர காலில பழைய காலத்தில கடிதம் எழுதி அனுப்பிமாதிரி இப்ப ஐஸ், ஹெரோய்ன் எண்டு போதைப்பொருளையும் கடத்துகினமாம். அதுக்குத்தான் இவ்வளவு காசு கட்டி இந்தியாவில இருந்து பெருந்தொகையான புறாக்களைக் கடத்திக் கொண்டந்திருக்கினம். கடத்தல் செய்யிறதுக்கும் ஒரு கடத்தல் செய்திருக்கினம்.


அப்பிடிச் சேர்விஸான புறாக்களை நேவிக்காரர் பிடிச்சு பறக்கவிட்டால், அது எங்க இறங்கவேணும் எண்டு பழக்கப்பட்டிருக்குமோ அங்கதான் போய் இறங்கியிருக்கும், அதால எங்க போதைப்பொருள் கடத்துப்படுகுது எண்ட இடத்தை நேவிக்காரர் கண்டுபிடிச்சிருப்பினம். அப்பிடி போதைப்பொருளை புறாக்கள் எங்க கொண்டுபோய் இறக்குதுகள் எண்டு பிடிபடக்கூடாது எண்டுதான், புறாக்களை பெற்றோல் ஊத்திக் கொளுத்தியிருக்கினமாம். இதெல்லாம் அங்கத்தை ஊர்ச்சனம் சொல்லுற கதை. ஆனால் நடக்கிறதைப் பாக்கேக்க நம்பக்கூடிய கதைமாதிரித்தான் கிடக்குது. அதைவிட இன்னொரு டவுட்டும் இருக்குது. நேவிக்காரர் உந்தப் புறாக்களையும், அதைக் கடத்தினவையையும் பிடிச்சவையெல்லோ. அப்பிடிப் பிடிபட்டவையை ஏன் பொலிஸிட்டக் குடுக்கேலை? பொலிஸிட்டக் குடுத்தால் தங்கட குட்டு ஏதும் உடைஞ்சிடுமெண்டு நேவிக்காரர் பயப்பிடுகினமோ? உதொண்டும் யாமறியோம் பராபரமே.

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

பிறப்பு 20 . 01 . 1938



இறப்பு 15 . 02 . 2026

### அம்பலவாணர் காசிலிங்கம்
### (Government retired Pharmasict)

யாழ். தச்சன்தோப்பு, கைதடியைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட அம்பலவாணர் காசிலிங்கம் (ஓய்வு பெற்ற மருந்தாளர்) கடந்த 15.02.2026 அன்று கொழும்பில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் அம்பலவாணர் - பொன்னி தம்பதியரின் மகனும், பரமலிங்கம் - யோகம்மா தம்பதியரின் மருமகனும், அன்னலெட்சுமி அவர்களின் அன்புக் கணவரும், பொன்னம்பலம், பவளம், சாந்தம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், சார்மதி, வேல்வேந்தன், வேல்அழகன், பிரசன்னா, நிலானி ஆகியோரின் பாசமிகு தந்தையும், தவரஞ்சினி, சிந்துஜா, ஜெகதீசன் ஆகியோரின் மாமனாரும், கேஸ்வினி, நகீர்த்தன், அஸ்விதா, ஷநேயா, சர்வின், ஷவின்யா ஆகியோரின் பேரனும், சோதிலிங்கம், பஞ்சலிங்கம் ஆகியோரின் மைத்துனரும், கலாநிதி, சுவர்ணா ஆகியோரின் அண்ணனும், தட்சாயினி, நிசாந்தன், நிசானி, விஸ்ணுகோபன், துவாஸ், மதுசன் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் நாளை (19.02.2026) வியாழக்கிழமை மு.ப 11.00 மணியளவில் பொரள்ள ஜெயரட்ணா மலர்ச்சாலையில் நடைபெற்று பூதவுடல் தகனத்திற்காக பொரள்ள மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்
0777 493841
153/1, Modara street, Modara, Colombo 15.

---


## மாபிள் வேலை

உங்கள் வீடுகளுக்கு தரமான முறையில் அழகாக மாபிள் பதித்து தரப்படும்.
ஒரு சதுர அடி - 85 ரூபாய்.
நிலம் இழுத்து பதிக்க - 110 ரூபாய்
077 334 1281
(CR/60230 J-1)

## பராமரிப்பாளர் தேவை

வீட்டில் தங்கியிருந்து குழந்தையினை பராமரிக்கத்தக்க 50 வயதிற்கு மேற்பட்ட பணிப்பெண் தேவை.
தொடர்புகளுக்கு:-
077 480 4239
(CS/60769) J-1


---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி அந்தியேட்டி அழைப்பும்

குருவடி சரணம் — ஓம் சக்தி — திருவடி சரணம்





மேல் மருவத்தூர் ஆதிபராசக்தியின் பாதார விந்தங்களில்
22.01.2026 அன்று சரணடைந்த எம் ஆதார விருட்சம்

### அமரர் Dr.திருமதி இராஜினி சத்தியசீலன்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (19.02.2026) வியாழக்கிழமை காலை 06.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையில் இடம்பெற்று. அன்றைய தினம் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அதனைத்தொடர்ந்து 21.02.2026 சனிக்கிழமை அன்று முற்பகல் 11.00 மணியளவில் **சரஸ்வதி மண்டபத்தில் (Raja Cream House)** நடைபெறும் வழிபாட்டுடன் கூடிய மதியபோசன நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். இவ் அழைப்பை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தனிப்பிட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

குடும்பத்தினர் (077 4638 328 / 076 6649 778)

"உன் ஆன்மாவே கடவுள் உன் தேவைகளை எல்லாம் நிறைவேற்றும் சக்தி உன் ஆன்மாவிலேயே இருக்கின்றது"
Source:- Oracles Of Melmaruvatur Bangaru Adigalar

cs.60767 N-1 — இல.18, மணற்தரை ஒழுங்கை, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

---

## மரண அறிவித்தல்

தோற்றம் 20 . 09 . 1958



மறைவு 14 . 02 . 2026

### கதிரமலை சண்முகராசா
(மஸ்கன் கம்பனி ஊழியரும் மற்றும்
செல்வச்சந்நிதி திருக்குறிப்பு தொண்டநாயனார் அன்னதான மடம் - தலைவர்)

வல்லை அச்சுவேலி வடக்கை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கதிரமலை சண்முகராசா அவர்கள் கடந்த (14.02.2026) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரமலை - மாணிக்கம் தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும், காலஞ்சென்றவர்களான முருகேசு - குழந்தை தம்பதியரின் அருமை மருமகனும், பவளம்மா அவர்களின் அன்புக் கணவரும், விக்னேஸ்வரராசா (கனடா), புஸ்பராசா (சுவிஸ்), முரளீஸ்வரன் (லண்டன்) ஆகியோரின் அன்பு சகோதரனும், கோமதி, சர்வா, தயாளினி ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், வினுசியா, சியாந்தன், பிறேமிகா, சாரா, சுனிதா, ரியான், ரானியா, ஆரிஸ் ஆகியோரின் பாசமிகு பெரியதந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (18.02.2026) புதன்கிழமை மு.ப 10:00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12.00 மணியளவில் வல்லை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர் மற்றும் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

அச்சுவேலி வடக்கு,
வல்லை

தகவல்:
குடும்பத்தினர்
077 630 9891, 077 135 6407

(CS/60777) J-1

---

## மரண அறிவித்தல்

தோற்றம் 01 . 10 . 1946



மறைவு 16 . 02 . 2026

### சந்திரராணி இரத்தினம்

யாழ் மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சந்திரராணி இரத்தினம் அவர்கள் கடந்த (16.02.2026) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகேஸ் - சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான குருநாதி - சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மருமகளும், இரத்தினத்தின் பாசமிகு துணைவியும், காலஞ்சென்றவர்களான தங்கமலர், தங்கராணி, மனோன்மணி, கந்தசாமி மற்றும் தெய்வேந்திரம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம், தியாகராஜா, நாகலிங்கம், மற்றும் தங்கமலர் சந்திராதேவி, காலஞ்சென்றவர்களான குலசிங்கம், சின்னராசா மற்றும் தவமணி, சுவத்திரை, காசிநாதன் ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.02.2026) புதன்கிழமை முற்பகல் 09.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 11.00 மணியளவில் மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்
பரா - 077 472 9382
+47 973 54602

ஆனந்த வீதி,
மானிப்பாய்.

(CS/60770) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை




## கண்ணைக் கட்டிவிட்டு.....!

இலங்கையின் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் யுத்தம் மௌனித்து பல தசாப்தங்களைக் கடந்த பின்னரும், தமிழ் மக்களின் வாழ்வாதாரமான பூர்வீகக் காணிகள் இன்னும் இராணுவக் கட்டுப்பாட்டிலேயே இருப்பது தொடர்கதையாக நீள்கினறது. ஆட்சி மாற்றங்கள் நிகழும் போதெல்லாம், மக்களின் காணிகள் விடுவிக்கப்படும் என்ற வாக்குறுதிகள் வெள்ளமெனப் பாய்வது வழக்கம். ஆனால், நடைமுறையில் அந்த வாக்குறுதிகள் யாவும் வெறும் அரசியல் காகிதங்களாகவே காற்றில் பறக்கவிடப்படுகின்றன என்பதுதான் கசப்பான உண்மை.தற்போது ஆட்சியில் உள்ள அரசாங்கமும் தேர்தல் காலங்களில் காணி விடுவிப்புத் தொடர்பில் பல்வேறு உறுதிமொழிகளை வழங்கியே ஆட்சிப்பீடம் ஏறியது. எனினும், புதிய அரசாங்கம் பதவியேற்ற பின்னர் அங்கொன்றும் இங்கொன்றுமாக சில காணிகளும் வீதிகளும் விடுவிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டாலும், அவை மக்களின் கைகளுக்கு முழுமையாகச் சென்றடையவில்லை என்பதே யதார்த்தம்.

பலாலி இராஜேஸ்வரி அம்மன் ஆலய விடுவிப்பு இதற்கு மிக அண்மைக்காலச் சான்றாகும். சுமார் 35 ஆண்டு களுக்குப் பின்னர் இந்த ஆலயம் விடுவிக்கப் பட்டதாக அரச தரப்புகளால் விமரிசையாகப் பிரசாரம் செய்யப் பட்டது. ஆனால், அந்த ஆலயத்துக்குச் செல்வதற்கான பிரதான வீதி இன்னமும் இராணுவத்தின் கட்டுப்பாட்டிலேயே உள்ளது. வீதி விடுவிக்கப்படாமல் ஆலயம் விடுவிக்கப்பட்டதாகக் கூறுவது, கண்ணைக் கட்டிவிட்டு காடு காட்டிய கதையாகவே இருக்கிறது. மறுபுறத்தில், பொதுமக்களின் காணிகளில் இருந்து பண்ணைகள் மற்றும் வர்த்தக நடவடிக்கைகள் மூலம் வருமானம் ஈட்டிவரும் இராணுவம், அக்காணி களைத் தக்கவைத்துக்கொள்ளப் பல்வேறு காரணங் களை அடுக்கிக்கொண்டே போகிறது. காணி விடுவிப்புச் செய்வதற்குப் பாதுகாப்பு வேலிகளை அமைப்பதற்கு நிதி தேவை என இராணுவம் முன்வைக்கும் கோரிக்கைகள், விடுவிப்பு நடவடிக்கைகளை மேலும் இழுத்தடிப்பதற்கான ஒரு தந்திரோபாயமாகவே பார்க்கப்படுகிறது. இராணுவத்தின் இந்த இழுத்தடிப்புகளால் விடுவிக்கப்படும் என்று அறிவிக்கப் பட்ட பல ஏக்கர் காணிகளில் குடியமரும் மக்களின் எதிர்பார்ப்பு இன்னமும் கனவாகவே இருக்கின்றது.

போர் முடிந்து நீண்ட காலமாகும் நிலையில், இன்னும் 'பாதுகாப்பு' என்ற போர்வையில் பொது மக்களின் குடியிருப்புகளையும் விவசாய நிலங்களையும் முடக்கிவைத்திருப்பதை எவ்விதத்திலும் நியாயப் படுத்தமுடியாது. அதேபோன்று காணிகள் விடுவிக்கப் படாமைக்கு அரச அதிகாரிகளைக் குற்றஞ்சாட்டித் தப்பித்துக்கொள்வது ஒரு தீர்வாகாது. அரசாங்கம் காணி விடுவிப்பில் உண்மையிலேயே உளச்சுத்தியுடன் செயற்படுமாக இருந்தால், இராணுவத்தினால் ஏற்படுத்தப்படும் இவ்வாறான முட்டுக்கட்டைகளை உடனடியாக அகற்றவேண்டும். சொந்த நிலங்களை இழந்துவிட்டு, வாடகை வீடுகளிலும் முகாம்களிலும் தவிக்கும் மக்களின் வலியை அரசாங்கம் உணர வேண்டும். அரசாங்கம் தனது தேர்தல் கால வாக்குறுதிகளை நிறைவேற்றவேண்டுமானால், இராணுவத்தின் இழுத்தடிப்புகளையும், தன்னிச்சையான செயற்பாடுகளையும் புறந்தள்ளி, காணிகள் விடுவிப்புத் தொடர்பில் ஒரு காத்திரமான அரசியல் முடிவை எடுக்க வேண்டும். வடக்கு மக்களின் நம்பிக்கையை வென்றெடுக்க வேண்டுமாயின், அவர்களின் பூர்வீக நிலங்கள் நிபந்தனையின்றி - இழுத்தடிப்பின்றி கையளிக்கப்படுவதே முதற்படியாக அமையும். தற்போதைய அரசாங்கம் இந்த விடயத்தில் முந்தைய அரசாங்கங்களைப் போலன்றி, வினைத்திறனுடன் செயற்படவேண்டும் என்பதே தமிழ் மக்களின் எதிர்பார்ப்பாகும்.


செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com




## பொய்யாமொழி

**அறன்எனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்
பிறன்பழிப்ப தில்லாயின் நன்று**

**பொருள்:** அறம் என்று சிறப்பித்துச் சொல்லப்பட்டது இல்வாழ்க்கையே ஆகும்; அதுவும் மற்றவன் பழிக்கும் குற்றம் இல்லாமல் விளங்கினால் மேலும் நன்மையாகும்.




## சிதையும் குடும்பக் கட்டமைப்புகள் இலங்கைக்குப் புதிய அச்சுறுத்தல்



*மல்கம் ஆண்டகை தெரிவிப்பு*

**களுத்துறை, பெப்.18**

**இலங்கையில் குடும்ப வாழ்க்கையின் சிதைவு அதிகரித்து வருகின்றது. திருமண பந்தத்தின் மீதான நம்பிக்கையின்மை சமூகத்துக்குப் பெரிய அச்சுறுத்தலாக மாறியுள்ளது என்று கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் எச்சரித் துள்ளார்.**

களுத்துறை, லூர்து மாதா தேவாலயத்தின் வருடாந்தப் பெருவிழாவில் பங்கேற்றபோது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

குடும்பக் கட்டமைப்புகளின் வீழ்ச்சி நாட்டில் "ஒரு ஆபத்தான தொற்று நோய் போல பரவிவருகின்றது. குடும்பமே சமூகத்தின் மிகச்சிறிய அலகு. குடும்பங்களின் நிலைத்தன்மையே சமூகத்தின் வலிமைக்குக் காரணம்.


இன்றைய காலகட்டத்தின் மிகப் பெரிய அழிவு குடும்ப வாழ்க்கையின் திட்டமிட்ட சிதைவுதான். பல இளைஞர்கள் உணர்ச்சிகள், உடல் ஈர்ப்பு அல்லது கணநேர மகிழ்ச்சியால் உந்தப்பட்டு திருமண பந்தத்தில் இணைகிறார்கள். ஆனால் விரைவில் அதைக் கைவிடுகிறார்கள். பலருக்குத் திருமண வாழ்க்கை என்பது உண்மையான நோக்கம் இல்லாத ஒரு விளையாட்டாக மாறிவிட்டது.

சமூகத்தின் வலுவான அடித்தளத்திற்கு நிலையான குடும்பங்கள் அவசியம். ஆன்மிக ரீதியாக திருச்சபைவலுவாகஇருப்பதற்குஉண்மையான குடும்ப வாழ்க்கை அத்தியாவசியமானது- என்றார். (ச-இ)

## டெங்குப் பரவல் நாட்டில் வீரியம்

இலங்கையில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்துள்ளது என்று சுகாதார அமைச்சின் தேசிய டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது. கடந்த 2025ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது, 2026 ஜனவரி மாதத்தில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 31 வீதம் அதிகரித்துள்ளது. இந்த ஆண்டின் ஜனவரி மாதத்தில் மட்டும் 6,500க்கும் மேற்பட்ட நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். கொழும்பு மாவட்டத்திலேயே அதிக எண்ணிக்கையிலான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். கம்பஹா மற்றும் களுத்துறை மாவட்டங்களும் அதிக ஆபத்துள்ள வலயங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன. தொடர்ச்சியான மழை மற்றும் வெப்பநிலை மாறுபாடுகள் நுளம்புகள் பெருகுவதற்கு ஏதுவான சூழலை உருவாக்கியுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## குறைந்த வருமானமுடையோருக்கு கொழும்பில் 2,500 புதிய வீடுகள்



கொழும்பு, பெப்.18

கொழும்பு நகர்ப்புற மறுமலர்ச்சி கூட்டுத்திட்டத்தின் கீழ், குறைந்த வருமானம் கொண்ட மற்றும் நிரந்தர வீடற்ற குடும்பங்களுக்கு 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீடுகளை வழங்க அரசாங்கம் திட்டமிட்டுள் ளது. கொழும்பு 14, சிறிமாவோ பண்டாரநாயக்க மாவத்தையில் நிர்மாணிக்கப்பட்டுவரும் 'ஸ்டேடியம்கம' வீடமைப்புத்தொகுதியை நேரில் சென்று பார்வையிட்ட பின்னர் நகர அபிவிருத்திப் பிரதி அமைச்சர் எரங்க குணசேகர இதனைத் தெரிவித்தார்.

2026ஆம் ஆண்டுக்குள் 2,500 நகர்ப்புற வீடமைப்பு அலகுகள் தகுதியான குடும்பங்களுக்கு வழங்கப்படவுள்ளன. அடுத்த 2 ஆண்டுகளில் கொழும்பில் மொத்தம் 7,000 புதிய வீடுகளை வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. வீடுகளை வெறும் கட்டடங்களாக வழங்காமல், பாதுகாப்பு, சமூகத் தேவைகள், வசதிகள் மற்றும் சௌகரியங்கள் நிறைந்த முழுமையான குடியிருப்புகளாக மாற்றுவதே அரசாங்கத்தின் நோக்கம் என்றும் பிரதி அமைச்சர் குறிப்பிட்டார். (ச-இ)

## துறைமுக அதிகாரசபைக்கு புதிய தலைவர்

கொழும்பு, பெப்.18

இலங்கைத் துறைமுக அதிகாரசபையின் புதிய தலைவராக கலாநிதி மஹிந்த பராக்கிரம திஸாநாயக்க நியமிக்கப்பட்டுள்ளார் என்று துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சு அறிவித்துள்ளது. (எ-இ)

நேரம்

வியாழக்கிழமை - மாசி 07

19.02.2026

சுபநேரம் : 08.02 - 09.32

ராகுகாலம் : 02.02 - 03.32


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்துறை முயற்சியாளர்களுக்கு வர்த்தக சம்மேளனத்தால் விருது

யாழ்ப்பாணம்,பெப்.18
கனடா இலங்கை நாடுகளின் கூட்டு வர்த்தக சம்மேளனத்தின் ஏற்பாட்டில், பல்துறைசார் முயற்சியாளர்களை ஊக்குவிக்கும்நோக்குடன், விருது வழங்க ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது. வர்த்தகம், விவசாயம், கடற்றொழில், சுற்றுலா உள்ளிட்ட பல்துறைசார் வர்த்தக பொருளாதாரத்துறைகளைச் சார்ந்த முயற்சியாளர்களை இனங்கண்டு, இந்த விருது வழங்கப்பட்டுவருகின்றது. கடந்த வருடம் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களைச் சேர்ந்தவர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டன. இந்த வருடம் மன்னார், புத்தளம் உள்ளிட்ட மேலும் பல மாவட்டங்களைச்சேர்ந்தவர்களுக்கு விருதுகள் வழங்கப்படவுள்ளன. பிரதானமாக பெண்களின் திறமைகளுக்கு அங்கீகாரம் வழங்கப்படும். சிறிய, நடுத்தர வர்த்தக மற்றும் முயற்சியாளர்கள் இதற்கு விண்ணப்பிக்கமுடியும். விண்ணப்பிக்க விரும்புவோர் தமது முயற்சிகளை அடையாளப்படுத்தி, ஆளுநர், மாவட்டச் செயலர், பிரதேச செயலர் ஊடாக முழுமையான உறுதிப்படுத்தலுடன், எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கமுடியும். கடந்த வருடம் 20 முயற்சியாளர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டன. இந்த வருடம் 25 முதல் 30 பேருக்கு விருதுகள் வழங்கப்படும். எதிர்வரும் மே மாதம் 22 திகதியன்று, யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விருந்தினர் விடுதியில் விருது வழங்கல் நிகழ்வு இடம்பெறும் என்று சம்மேளனத்தின் விருது வழங்கும் ஏற்பாட்டுக் குழு தெரிவித்துள்ளது. (க-27)

## சொற்பொழிவு

யாழ்ப்பாணம், பெப்.18
நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி கோவில் நடத்தும் வாராந்தச் சுக்கிரவாரக் கந்தபுராண படனச் சொற்பொழிவுத் தொடர் ஆலயத்தின் சண்முக விலாச மண்டபத்தில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமைமாலை 5.30 மணிக்கு இடம்பெறவுள்ளது சிவநெறிப்பிரகாசர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது. (எ-41)

## கிவுல் ஓயாத் திட்டம் தொடர்பாக முல்லைத்தீவில் கலந்துரையாடல்

முல்லைத்தீவு, பெப்.18
தமிழர்களுக்குப் பாதகமான கிவுல் ஓயா நீர்த்தேக்கக் குடியேற்றத் திட்டம் தொடர்பில், மக்களுக்கு விழிப்பூட்டும் கலந்துரையாடல் முல்லைத்தீவு ஊடக அமையத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. நிகழ்வின் ஆரம்பத்தில், மறைந்த ஊடகவியலாளர் புண்ணியமூர்த்தி சத்தியமூர்த்தியின் நினைவேந்தல் இடம்பெற்றது. தொடர்ந்து கிவுல் ஓயாத் திட்டத்தின் பாதக நிலை தொடர்பில் கலந்துரையாடப்பட்டன.
கலந்துரையாடலில் நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், சிரேஷ்ட ஊடகவியலாளர் அ.நிக்சன், முல்லைத்தீவு ஊடக அமையத்தைச் சார்ந்த ஊடகவியலாளர்கள், சிவில் சமூகச் செயற்பாட்டாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (க-246)



# தூய சமூகத் தொடர்பாடலைத் தவக்காலத்தில் பேணுவோம்

அனைத்துலக கிறிஸ்தவர்களும் இன்றையதினம் இயேசுவின் பாடுகள், சிலுவை மரணம், உயிர்ப்பு ஆகிய நிகழ்வுகளை நினைவுகூரும் தவக்காலத்தினை ஆரம்பிக்கின்றனர். இக்காலம் இயேசுவின் மனிதநேயம், மனித விடுதலைப் போதனைகள், செயற்பாடுகளை உள்வாங்கி எம்மை சுயபரிசோதனை செய்து உள்ளக்கறைகளை சலவை செய்து தூய உள்ளத்தோராக உருமாற்றம் பெற விசேட அழைப்புவிடுக்கும் அருளின் காலமாகும்.
மீட்பின் காலம், மன்னிப்பின் காலம், பழமை களைந்து புதுமைக்குள் நுழையும் மனமாற்றத்தின் காலம். இறைவனோடும் அயலவரோடும் முறிந்துபோன உறவுகளை சீர்செய்யும் ஒப்புரவின் காலம். ஆண்டவரே! இரக்கமாயிரும். ஏனெனில் நாங்கள் பாவம் செய்தோம் என எம் நிலை உணர்ந்து மீண்டெழும் காலம் தம்மை பிறருக்காக வழங்க முன்வரும் தபசுகாலம். தபஸ் ( TAPAS) என்பது ஒரு சமஸ்கிருத வார்த்தை. இவ்வார்த்தையானது (TAP) என்ற வேறொரு மூலச்சொல்லில் இருந்து வருகிறது. இதற்கு மூன்று வகையான அர்த்தங்கள் உண்டு. முதலாவதாக 'தபஸ்' என்றால் 'HEAT, WARMTH' என்பதாகும். இதை ஆன்மிக வெம்மை என்றும் உள்ளத்தைப் புடமிடுதல் என்றும் சொல்லலாம். இரண்டாவதாக பல்வேறுபட்ட ஒறுத்தல் முயற்சிகள் வழியாக தனக்குத்தானே துன்பத்தை இழைத்து அவற்றின் வழியாக ஆன்மிக உயர்நிலையை அடைய முயல்வதாகும். மூன்றாவதாக செப, தவதானங்கள் வழியாக மனஉறுதியைப் பெருக்கிக் கொள்வதும், சிந்தனைகளை ஒரு முகப்படுத்தி அவற்றை வலுவுள்ளதாக்கி எமக்கும் பிறருக்கும் பயன்தரக்கூடிய வகையில் இலக்கை நோக்கிச் செல்வதாகும்.
அதேவேளை யாழ் .மறைமாவட்ட கத்தோலிக்கத் திருஅவையின் ஆயர் வண. ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை இந்த ஆண்டை சமூகத்தொடர்பு ஆண்டாகப் பிரகடனப்படுத்தியுள்ளார். 'சமூக ஊடகங்களைப் பயன்படுத்தி எமது தனிப்பட்ட சமூக, ஆன்மிக, வாழ்வில் உயர்வடைவோம்' எனும் தொனிப்பொருளில் சமூகத்தொடர்பு ஆண்டு முன்னெடுக்கப்படுகிறது. நவீன சமூகத்தொடர்பாடல் சாதனங்கள் நன்மைகளும் தீமைகளும் கொட்டிக்கிடக்கும் கலவைப்பேழையாக விளங்குகிறது. ஆனால் மனித வாழ்வையும், ஆன்மிக, கலை, கலாசார விழுமியங்களையும், கல்வி, அரசியல், உலகியல் தொடர்புகளையும் உயர் நிலைக்குக் கொண்டுவர இக்கலவைப் பேழையில் உள்ள நன்மைகளைத் தேர்ந்தெடுத்து பயன்படுத்தவேண்டும் என்ற விழிப்புணர்வை ஏற்படுத்தும் செயற்பாடாக சமூகத்தொடர்பு ஆண்டு வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்தத் தவக்கால ஒறுத்தலாக தீமை விளைவிக்கும் அலைவரிசைப்பதிவுகளையும் செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தில் தவறான, உண்மையற்ற, ஆபாசமான நிகழ்வுகளை பதிவிடுவதையும், பார்ப்பதையும் நிறுத்திக்கொள்ள முற்படுவோம்.
மேலும் இலங்கையின் முதலாவது தமிழ் கத்தோலிக்கப் பத்திரிகையான 'பாதுகாவலன்' 1876ஆம் ஆண்டு சத்தியவேத பாதுகாவலன் என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்டு 150ஆண்டுகள் நிறைவையொட்டியதாக சமூகத்தொடர்பு ஆண்டு பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இந்தப் பத்திரிகை உலகின் தமிழ் பத்திரிகைகளின் ஆரம்ப வரலாற்றில் நான்காம் இடத்தில் உள்ளதும் குறிப்பிடத்தக்கது. யாழ்.மறைமாவட்ட சமூகத்தொடர்பு ஆணைக்குழுவினால் ஒளிபரப்பப்படும் 'மறை அலை'தொலைக்காட்சி சேவையும் இறை, மனித, சமூக தொடர்பாடலில் பெரும் பங்காற்றி வருகின்றது. இந்தத்தவக்காலத்தில் இவற்றைப் பயன்படுத்தி உறவுகளைப் பலப்படுத்தி பரிமாறி இறை வழிக்கு அனைவரையும் அழைத்துச்செல்ல முற்படுவோம்.
உங்கள் இதயத்தைக் கடினப்படுத்திக் கொள்ளாதீர்கள் .மாறாக ஆண்டவரின் குரலைக் கேட்பீர்களாக. ஏழைகள், துன்புறுவோர், உரிமைகள், வசதிகள், சேவைகள் மறுக்கப்பட்டு ஒதுக்கப்படுவோர் இயற்கை இடரின் தாக்கத்தால் பாதிப்புற்றோரின் நடுநிலைக்குரலாக நவீன ஊடகங்களைப் பயன்படுத்துவோம். சிறுவர்களைப் பாதிக்கும் பிறரைப் புண்படுத்தும் செய்திகளைப் பதிவிடுவதைத் தவிர்த்துக்கொள்வோம்.

'பிறர் பார்க்கவேண்டும் என செப, தவ, தானங்களை செய்வதை விடுத்து வலது கை செய்வதை இடது கைக்குத் தெரியாதிருக்கட்டும். அப்பொழுது நீங்கள் செய்யும் அறச்செயல்கள் மறைவாயிருக்கும். மறைவாயுள்ளதைக் காணும் உங்கள் தந்தையும் உங்களுக்குக் கைமாறு அழிப்பார்'(மத் 6:16)

● எஸ். யேசுதாஸ்
கொழும்புத்துறை

# இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** காரிய அனுகூலமான நாள். தந்தை வழியில் எதிர்பார்த்த உதவி கிடைப்பதில் தாமதம் ஏற்படும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுடன் வீண் செலவுகளும் ஏற்படும். விற்பனையும் இலாபமும் அதிகரிக்கும்.

**இடபம்:** தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். எதிரிகளின் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். காரியங்கள் ஆதாயம் தருவதாக இருக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். முக்கியமான முடிவு எடுப்பதற்கு உகந்த நாள்.

**மிதுனம்:** சிந்தித்துச் செயற்படவேண்டிய நாள். தாய்வழி உறவினர்கள்மூலம் எதிர்பார்த்த காரியம் இழுபறியாகும். பிள்ளைகளின் பிடிவாதம் சற்றுக் கோபத்தை ஏற்படுத்தினாலும் பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**கடகம்:** புதிய முயற்சிகள் அனுகூலமாக முடியும். எதிர்பார்த்த சுபச்செய்தி கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு. வாழ்க்கைத்துணையால் ஆதாயம் உண்டாகும். இளைய சகோதரர்கள் உதவிகேட்டு வருவார்கள்.

**சிம்மம்:** அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும். எதிர்பாராத பணவரவுடன் திடீர்ச்செலவுகளும் ஏற்படும். சகோதர்களால் சில சங்கடங்களைச் சமாளிக்கவேண்டியிருக்கும்.

**கன்னி:** உற்சாகமான நாள். ஆனால், புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். கணவன்– மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வாகனத்தில் செல்லும்போது கவனமாக இருக்கவும்.

**துலாம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். சிலருக்குத் திடீர்ப் பணவரவுக்கும் எதிர்பாராத செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு. உறவினர்களுக்காக செலவு செய்யவேண்டிவரும்.

**விருச்சிகம்:** காரியங்கள் அனுகூலமாக முடியும். தாய்மாமன்வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். வாழ்க்கைத்துணை உங்கள் முயற்சிக்கு ஆதரவாக இருப்பார்.

**தனுசு:** உற்சாகமாகச் செயற்படுவீர்கள். தந்தைவழியில் அனுகூலப்பலன்கள் ஏற்படும். குடும்பத்தில் உங்கள் ஆலோசனைக்கு மிகுந்த முக்கியத்துவம் கிடைக்கும்.

**மகரம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். தந்தையுடன் ஏற்பட்டிருந்த மனஸ்தாபம் நீங்கும்.

**கும்பம்:** புதிய முயற்சியில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். தாய்வழி உறவுகளால் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும். அரசாங்கக் காரியங்கள் இழுபறியாகும்.

**மீனம்:** அதிகரிக்கும் செலவுகளால் கையிருப்புக் குறையும். வாழ்க்கைத்துணைவழி உறவினர்களால் சில பிரரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## தேசியமட்ட காற்பந்தாட்டப் போட்டியில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி இரண்டாமிடம்


யாழ்ப்பாணம், பெப்.18

இலங்கை பாடசாலைகள் காற்பந்தாட்டச் சங்கம், அகில இலங்கை ரீதியில் நடத்திய, 14 வயதுப் பிரிவினருக்கான SAMAPOSHA CHAMPION TROPHY 2025 கிண்ணத்துக்கான காற்பந்தாட்ட இறுதிப்போட்டியில், யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி, இரண்டாம் இடத்தைப் பெற்றது.


யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கும் கொழும்பு ஷாகிராக் கல்லூரிக்கும் இடையில் அண்மையில் கொழும்பில் இடம்பெற்ற போட்டியில், யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரியை, கொழும்பு ஷாகிராக் கல்லூரி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (க-20)



சாவகச்சேரி சக்தியம்மன் தமிழ் வித்தியாலய மாணவர்களின் செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை வித்தியாலய முன்றலில் அதிபர் தலைமையில் நடைபெற்றது. (ச-9)




சாவகச்சேரி சங்கத்தானை சாரதா முன்பள்ளி மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் கடந்த புதன்கிழமை வழங்கப்பட்டன. சாவகச்சேரி நகரசபை வட்டார உறுப்பினர் ஜெ.ஜெயப்பிரகாசின் சொந்த நிதியில் இவை வழங்கப்பட்டன. நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் பொ.கஜேந்திரகுமார், சாவகச்சேரி நகரசபை மற்றும் பிரதேசசபை உறுப்பினர்கள், முன்பள்ளி ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர் உட்பட பலர் கலந்து கொண்டனர். (எ-41-159)




பெண் தலைமைத்துவக் குடும்பங்களைச் சேர்ந்த பொருளாதாரம் நலிவுற்ற மாணவர்களுக்குப் பாதணி, புத்தகப்பை என்பன கணபதி அறக்கட்டளையால் வழங்கப்பட்டுள்ளது. நோர்வே பேருந்து நண்பர்கள் மற்றும் நோர்வே தமிழ் மீடியா அமைப்புகளின் நிதியனுசரணையில் இந்த உதவித்திட்டம் கணபதி அறக்கட்டளையால் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. (ச-100)

மட்டக்களப்பு பிரம்மகுமாரிகள் இராஜயோக நிலையம் ஏற்பாடு செய்த தியானம் பற்றிய அருளுரை நிகழ்வு மட்டக்களப்பு தேசிய கல்வியியற் கல்லூரியில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது. இதில் மாணவ ஆசிரியர்களும் விரிவுரையாளர்களும் கலந்துகொண்டனர். (எ-41-159)





தென்மராட்சிப் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட வரணி வடக்கு, குடமியன் மற்றும் வரணி இயற்றாலை ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த பெண் தலைமைத்துவ அமைப்புகளில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்களுக்கான மதிநிலை மகளிர் திட்டம் நிகழ்ச்சி அண்மையில் வரணி மத்திய கலாசார மண்டபத்தில் நடத்தப்பட்டது. வேர்ல்ட் விஷன் நிறுவன அனுசரணையுடன் நடத்தப்பட்ட நிகழ்வில் மாவட்டச் செய்லக மற்றும் பிரதேச செயலக மனிதவள அபிவிருத்தி நிலைய அலுவலர்கள் [illegible]



வரலாற்றுச் சிறப்புமிக்க கீரிமலை நகுலாம்பிகாதேவி சமேத நகுலேஸ்வரர் ஆலய மஹோற்சவப் பெருவிழாவின் பத்தாம் நாள் மாலை உற்சவம் கடந்த புதன்கிழமை பக்திபூர்வமாக நடைபெற்றது. இதன்போது அழகிய தண்டிகையில் நகுலாம்பிதேவி சமேத நகுலேஸ்வரப் பெருமான் எழுந்தருளி வெளிவீதி உலா வந்தார். (ச-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Young Men's Christian Association - Jaffna
## VACANCIES

JAFFNA ESTD:1890

The Young Men's Christian Association (YMCA) of Jaffna, a Christian organization dedicated to youth development, community service, and social responsibility, is seeking a dynamic and committed individual for the below posts.

YMCA Jaffna invites applications from suitable candidates for the following positions:

1. **Programme Secretary / Liaison Officer**
   **Requirements:**
   • Bachelor's Degree / Programme-related qualification
   • Proficiency in English (written and spoken)
   • Excellent communication and interpersonal skills
   • Computer literacy (MS Office)
   • Willingness to work extended hours
   • Age below 45 years
   Responsibilities:
   Stakeholder communication, programme coordination, information management, and relationship building.
2. **Accounts Assistant**
   **Requirements:**
   • G.C.E. A/L – Commerce Stream
   • Proficiency in QuickBooks (preferred)
   • Age below 45 years
   Responsibilities:
   Maintain accurate financial records, prepare financial reports, handle QuickBooks accounting, ensure compliance with financial regulations and organizational policies, and support the finance team.
3. **Receptionist**
   **Requirements:**
   • G.C.E. O/L
   • Computer literacy - MS Office (Preferred)
   Responsibilities:
   Telephone handling, front desk operations, member and guest services, facility oversight, and cash handling.
4. **Steward (பராமரிப்பாளர்)**
   Room maintenance – Hostel and Office Support (Peon duties)
   அறை மற்றும் அலுவலக பராமரிப்பு பணிகள்

Salary: An attractive salary will be offered for all categories
(சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்).

**Apply on or before 25th February 2026**
**Email : jaffnaymca@gmail.com**
**WhatsApp : 077 476 6300**

**General Secretary**
**YMCA Jaffna**


# வேலையின்மை விகிதம் பிரிட்டனில் அதிகரிப்பு

லண்டன், பெப்.18

பிரிட்டனில் வேலையின்மை விகிதம் அதிகரித்துள்ளது என்று தேசிய புள்ளியியல் அலுவலகம் தெரிவித்துள்ளது. சுமார் ஐந்து ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு வேலையின்மை விகிதம் உயர்ந்துள்ளது என்று அதிகாரபூர்வ புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

கடந்த டிசெம்பர் மாதம் வேலையின்மை விகிதம் 5.2 வீதமாக அதிகரித்துள்ளது. 2024 ஆம் ஆண்டு தொழிற்கட்சி பதவியேற்ற போது இந்த எண்ணிக்கை 4.1 வீதமாகக் காணப்பட்டது. பொருளாதார வளர்ச்சிக்கு தற்போதைய அரசாங்கம் உறுதியளித்திருந்த நிலையில், வேலையின்மை விகிதம் கடுமையாக அதிகரித்துள்ளது என்றுநிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (எ-இ)


## வேலையாட்கள் தேவை

தெல்லிப்பழையில் அமைந்துள்ள அலங்கார தாவர விற்பனை நிலையத்துக்கு வேலையாட்கள் தேவை.

T.P.No. 077 507 0473
077 202 9464

## மணமகள் தேவை

1. மாவிட்டபுரம். இந்து. கௌரவகுலம் (K). 1988. ரோகிணி. M.S.in Computer Science Applied to Business Management, Head of Product Management, France Citizen மணமகனுக்கு மணமகள் தேவை. (46157)
2. பருத்தித்துறை. இந்து. 1990. குருகுலம். உத்திரட்டாதி. MSc Finance and Economics Assistan Director, Australia Citizen மணமகனுக்கு மணமகள் தேவை. (30699)
3. உடுவில். இந்து. கௌரவகுலம் (K). 1993. பூரம். B.Eng (Hons) in Civil and structural, project Engineer, Singapore மணமகனுக்கு மணமகள் தேவை. (52945)
4. முல்லைத்தீவு. இந்து. குருகுலம். 1994. அஸ்தம். MSc in Computer Science (University of Moratuwa) Associate lead மணமகனுக்கு மணமகள் தேவை. (47011)
5. உடுப்பிட்டி. இந்து. விஸ்வகுலம். 1995. மகம். Bachelor of Business Management (University of Jaffna), Banker மணமகனுக்கு மணமகள் தேவை. (56018)
6. தெல்லிப்பளை - பருத்தித்துறை. இந்து. குருகுலம். 1996. சித்திரை. M.B.A Bachelor of Accounting, Goverment Staff, Newzeland Citizen மணமகனுக்கு மணமகள் தேவை. (36133)
7. மானிப்பாய் - பருத்தித்துறை. இந்து. குருகுலம். 1993. ரேவதி. M.B.B.S, MSc Government Medical Doctor மணமகனுக்கு மணமகள் தேவை. (54621)
8. காரைநகர். இந்து. கௌரவகுலம். (V). 1988. அனுஷம். Bachelor of Science Analist, Australia Citizen மணமகனுக்கு மணமகள் தேவை. (37206)
9. மாதகல். இந்து. கௌரவகுலம். (K). 1991. பரணி. Engineering (UK) Management Officer UK Citizen மணமகனுக்கு மணமகள் தேவை. (53670)
10. யாழ் - Town. இந்து. விஸ்வகுலம். 1995. ரேவதி. BSc Civil Engineering, Civil Engineer, USA Citizen மணமகனுக்கு மணமகள் தேவை. (54530)

www.thaalee.com என்கிற website இல் நீங்களாகவே உங்களுக்கு பொருத்தமானவர்களைத் தெரிவு செய்துகொள்ளலாம். வெளிநாடு. உள்நாடு என்பன உண்டு.

S.Sharma J.P போன் :- 077 539 3728
திருமணசேவை 076 528 4510


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 19 . 04 . 1935



இறப்பு 28 . 02 . 2025

### அமரர் கந்தையா மனோன்மணி

திதி : பிரதமை

அம்மா என்ற சொல்லுக்கே அடையாளம் நீங்கள்தான்..!
அன்றாட நாளிதழை அன்று ஆவலாய் வாசித்து
அறிவான விடயங்களை அறிந்ததை முன்னுதாரணமாய்
அனைவரையும் உணர வைத்தீர்கள் !
அன்பாக எல்லோரையும் அணைத்தே வாழ வழிசமைத்து
அறவழிகாட்டி நின்ற அம்மாவே எமைப்பிரிந்து
அகன்றதே ஆண்டொன்று ! அகலவில்லையெம் விழிசொரிநீர் ...
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி ! சாந்தி ! சாந்தி !

ஆறாத்துயருடன்
குடும்பத்தினர்
077 332 1441

இல. 07, சென்மேரிஸ் 2ம் ஒழுங்கை,
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.
18.02.2026

(CS/60758) J-1

## ஓராண்டு நினைவு தினம்

தோற்றம் 26 . 10 . 1934



மறைவு 28 . 02 . 2025

### அமரர் குருசாமி சிவக்கொழுந்து

தாயே அம்மா
எங்கள் குடும்பத் தலைவி நீ
எங்கள் உறவுப் பாலம் நீ
எங்கள் வாழ்வின் நட்சத்திரம் நீ
எங்கள் தன்னம்பிக்கையை வளர்த்தவள் நீ
அன்பிற்கும் நன்றிக்கும் தலைமகள் நீ
எங்கேயனை சென்றாய்?
ஓராண்டு சென்றதனை
ஒவ்வொரு கணமும் உன் நினைவுகள் தான்
உன் ஆத்மா சாந்திபெற்று இறைவன்
பாதங்களில் சரணடைய ஆயிரம் கோடி
நமஸ்காரம் நன்றி இறைவா
ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி

அளவெட்டி மத்தி,
(cs.60768) (N-1)
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18.02.2026
புதன்கிழமை
புதன் பொய்கை

அன்பில் அச்சம் கலந்திருக்க முடியாது. நாம் கண்டு அஞ்சும் மனிதனிடம் நம்மாம் அன்பு செலுத்த முடியாது.

—அரிஸ்டாட்டில்.

# மண்டைதீவில் மைதானம்: ஆக்கமா அழிவா?

● ரம்மியா புஸ்பகரன்



யாழ்ப்பாண நகரிலிருந்து சுமார் 3 கிலோமீற்றர் தொலைவில், அமைதியான அலைகளால் சூழப்பட்டுக் கிடக்கும் தீவுதான் மண்டைதீவு. பலருக்கு இன்றும் இந்தக் கிராமத்தின் பெயர் கசப்பான யுத்தகால சோகங்களையும், மனிதப்புதைகுழிகளையும் நினைவூட்டலாம். ஆனால், அந்தச் சோகச்சுவடுகளுக்கு அப்பால், இயற்கை அன்னை இந்தத் தீவுக்கு வழங்கியுள்ள உயிர்ப் பல்வகைமை எனும் செல்வம் பலரும் அறியாத ஓர் அற்புதம்.

### அலைகளை அடக்கும் 'அலை ஆத்திக் காடுகள்'

மண்டைதீவின் கிழக்கு, தெற்கு மற்றும் மேற்கு என மூன்று பிரிவுகளாகப் பிரிந்து வாழும் சுமார் 1700 மக்களின் வாழ்வாதாரம் விவசாயத்திலும் மீன்பிடியிலும் தங்கியுள்ளது.

இங்குள்ள இயற்கையின் பேரதிசயம் 'கண்டல் தாவரங்கள்'. இதனை உள்ளூர் மக்கள் 'அலை ஆத்திக்காடு' என்று அழைக் கிறார்கள். சுனாமி போன்ற இயற்கைச் சீற்றங்களின்போது அலையின் வேகத்தைக் கட்டுப்படுத்தி, நிலத்தைக் காக்கும் கேடயமாக இவை விளங்குவதால் இந்தப்பெயர் வந்தது.

சூழலியலாளர்களின் கூற்றுப்படி, இங்கு ஏழு வகையான கண்டல் தாவரங்கள் காணப்படுகின்றன. அவிசீனியா (Avicennia) முதல் ரைசோபோரா (Rhizophora) வரை அரியவகை இனங்கள் இங்குண்டு. அதுமட்டுமன்றி, விடத்தல், ஆமணக்கு, ஆடாதோடை, நாயுண்ணி, தூதுவளை, முசுட்டை, எருக்கலை, மொசுமொசுக்கை, வட்டுக்கத்தரி போன்ற அரிய மருத்துவக் குணமிக்கத் தாவரங்களின் களஞ்சியமாகவும் இந்தத்தீவு விளங்குகின்றது.

### வலசைப் பறவைகளின் சொர்க்கம்

கடற்தாவரங்கள் மட்டுமன்றி, பறவைகளின் புகலிடமாகவும் மண்டைதீவு திகழ்கிறது. வெளிநாடுகளிலிருந்து வலசை வரும் பறவைகள், தமது புரதத் தேவையைப் பூர்த்திசெய்ய இங்குள்ள பூச்சிகளையும் மீன்களையும் தேடிவருகின்றன. இந்தப் பறவைகளால் நிகழும் மகரந்தச் சேர்க்கையையும், தாவரப் பரம்பலையும் அழகையும் காலம் காலமாய் பாதுகாத்துவருகிறது.

### சர்வதேச கிரிக்கெட் மைதானம்: ஒரு புதிய கனவு

இத்தகைய சூழலியல் முக்கியத்துவம் வாய்ந்த பகுதியில், 2025 செப்ரெம்பர் 1 ஆம் திகதி ஜனாதிபதி அநுரவினால் சர்வதேச கிரிக்கெட் மைதானத்துக்கான அடிக்கல் நாட்டப்பட்டது.

நீண்டகாலமாக அபிவிருத்தியைக் காணாத மண்டைதீவு மக்களுக்கு இது ஒரு புதிய நம்பிக்கையைத் தந்துள்ளது. "எமது நிலங்களின் மதிப்பு உயரும், இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கும், சுற்றுலாத்துறை வளரும்" எனப் பிரதேச மக்கள் இந்தத் திட்டத்தை மகிழ்ச்சியுடன் வரவேற்கின்றனர்.

### அபிவிருத்தியா? அழிவா?



அபிவிருத்தி ஒரு நாணயத்தின் ஒரு பக்கம் என்றால், அதன் மறுபக்கம் சூழலியல் தாக்கம் குறித்த அச்சத்தை விதைக்கிறது.

**இவ்வளவு பெரிய திட்டத்திற்கு முன்னதாக முறையான சூழல் ஆய்வு மேற்கொள்ளப்பட்டதா?**

மைதானத்தைப் பராமரிக்கத் தேவையான பெருமளவு நீருக்கு எங்கே போவது? ஏற்கனவே குடிநீர் தட்டுப்பாட்டில் இருக்கும் மண்டைதீவு மக்கள், வெளியில் இருந்து தண்ணீர் கொண்டு வரப்படும் திட்டத்தை எப்படி எதிர்கொள்வார்கள்? சர்வதேச மைதானத்தின் வரவு, அருகிலுள்ள அலை ஆத்திக் காடுகளையும், அங்கு வரும் பறவைகளின் வருகையையும் சிதைத்துவிடுமா? என்று சூழலியலாளர்கள் முன்வைக்கும் கேள்விகள் நியாயமானவை.

அவற்றுக்கான விடைகளை உரியவர்கள் தெளிவூட்டினாலேயே இந்தத் திட்டம் வெற்றியடையும்.

### நிலைபேறான தீர்வை நோக்கி...

அபிவிருத்தி என்பது ஓர் இடத்தின் வளர்ச்சிக்கு மிக அவசியம்.

ஆனால், அந்த வளர்ச்சி அந்தப் பிரதேசத்தின் இயற்கையை அழித்து உருவாவதாக இருக்கக்கூடாது.

'சூழல் நேயம் மிக்க அபிவிருத்தி'(Eco friendly Development) என்பதே மண்டைதீவு போன்ற உணர்வுமிக்க சூழல் தொகுதிகளுக்குப் பொருத்தமானது.

யாழ்ப்பாணத்தில் மைதானம் அமைக்க மாற்று இடங்கள் இருக்கும் போது, உயிர்ப்பல்வகைமையைப் பலி கொடுத்துத்தான் இந்த மைதானம் அமைய வேண்டுமா? என்ற கேள்வி சமூக ஆர்வலர்களிடையே ஓங்கி ஒலிக்கின்றது.

இயற்கையின் அழகும், சர்வதேசத் தரத்திலான விளையாட்டும் கைகோர்த்துச் செல்லும் ஒரு திட்டமாக இது அமையுமானால் மட்டுமே, மண்டைதீவின் எதிர்காலம் ஒளிமயமாக இருக்கும்.

இல்லையேல், நாம் ஒரு மைதானத்தைப் பெற்றுக்கொண்டு, ஒரு பொக்கிஷமான சூழற்தொகுதியைத் தொலைத்தவர்களாகி விடுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சுரண்டும் இடைத்தரகு ......!?



○எம்.சீ.எல்.வளவன்

2025ஆம் ஆண்டு 'டித்வா' புயலின் கோரத்தாண்டவத்தோடு விடைபெற்றது. கிளிநொச்சி முதல் வன்னிப் பெருநிலப்பரப்பு வரை வெள்ளக்காடாக மாறிய வயல்நிலங்கள், விவசாயிகளின் கண்ணீரால் இன்னும் ஈரமாகவே இருக்கின்றன. அரசாங்கம் இழப்பீடுகளை அறிவித்திருந்தாலும், அது ஒரு சிலருக்குக் கிடைப்பதும் பலருக்குக் கிடைக்காமல் போவதுமான பாரபட்சங்கள் நெடுங்கேணி போன்ற பகுதிகளில் ஏக்கத்தையே மிஞ்சச் செய்துள்ளன. 2026ஆம் ஆண்டில் 'தை பிறந்தால் வழி பிறக்கும்' என்ற நம்பிக்கையோடு விவசாயிகள் காத்திருந்தாலும், அவர்களின் உழைப்பை விழுங்கும் இடைத்தரகர்களின் ஆதிக்கம் தணியவே இல்லை.

**'இடைத்தரகு' - சேவையா? சுரண்டலா?**

ஆரம்ப காலங்களில் ஊர்ப் பெரியவர்கள் மற்றும் பெரிய மனிதர்களால் ஒரு கௌரவமான சேவையாகச் செய்யப்பட்ட 'தரகு' வேலை, இன்று பணபலம் மற்றும் அரசியல் அதிகாரத்துடன் கூடிய ஒரு அசுரத் தொழிலாக உருவெடுத்துள்ளது. கிராமப்புற மக்களின் ஏழ்மையையும், கள்ளங்கபடமற்ற நேர்மையையும் மூலதனமாகக் கொண்டு இந்த இடைத்தரகர்கள் விவசாயம் முதல் காணி விற்பனை வரை சகல துறைகளிலும் ஆதிக்கம் செலுத்துகின்றனர்.

**நெற்செய்கையில் அரங்கேறும் 'மாபியா' தந்திரங்கள்**

இலங்கையின் நெற்செய்கையில் பெரும் அரிசி ஆலை உரிமையாளர்கள் (Rice Mill Owners) மற்றும் இடைத்தரகர்களின் கபட நாடகங்கள் வியக்கத்தக்கவை:

- அறுவடை ஆரம்பிக்கும்போது அதிக விலையைக் கொடுத்து நெல் கொள்வனவு செய்வது போல ஒரு மாயையை உருவாக்குவார்கள். இதனால் சிறு வியாபாரிகள் சந்தையிலிருந்து அப்புறப்படுத்தப்படுவர்.
- விவசாயிகள் அதிக விலையை எதிர்பார்த்துக் காத்திருக்கும்போது, திட்டமிட்டு தமது வாகனங்களை அனுப்பாமல் இழுத்தடிப்பார்கள். எதிர்பாராத மழையில் நெல் நனைந்த பிறகு, "நனைந்த நெல், பழுத்தது காணாது" என்று காரணங்களைக் கூறி, பாதி விலைக்கு நெல்லைக் கேட்பார்கள். வேறுவழியின்றி விவசாயி தனது உழைப்பைத் தாரைவார்க்கிறான்.
- ஒரு மூடை நெல்லின் எடையை அரசாங்கம் வரையறுக்காததால், வியாபாரிகளே அதனைத் தீர்மானிக்கின்றனர். தெற்கில் 65 கிலோவாக இருக்கும் ஒரு மூடை, வடக்கில் 75 கிலோவாகக் கணக்கிடப்படுகிறது.



**காய்கறி மற்றும் சிறுதானியச் சந்தையில் 'நிழல் விதிகள்'**

நெற்செய்கை மட்டுமல்ல, மரக்கறி மற்றும் சிறுதானியச் செய்கையிலும் சுரண்டல்கள் தொடர்கின்றன

- மரக்கறிக் கொள்வனவின் போது '10 கிலோவுக்கு 1 கிலோ கழிவு' என்ற அநீதியான விதியை இடைத்தரகர்கள் அமுல்படுத்துகின்றனர். அதாவது 500 கிலோ விற்றால் 50 கிலோ இலவசமாகப் போய்ச் சேர்கிறது.
- சந்தையில் 1000 ரூபாவுக்கு விற்பனையாகும் மரக்கறிகளுக்கு விவசாயிக்குக் கிடைப்பதோ வெறும் 200 முதல் 300 ரூபா வரை மட்டுமே.

**கால்நடை வளர்ப்பிலும் கைவரிசை**

இறைச்சி விற்பனையின் போது 'உயிர் எடை' (Live weight) அடிப்படையில் கொள்வனவு செய்தாலும், தோல், தலை, கால் எனப் பல்வேறு கழிவுகளைக் கழித்தே விலை கொடுக்கின்றனர். இதனால் நுகர்வோருக்கும் பலன் கிடைப்பதில்லை, பண்ணையாளருக்கும் இலாபம் கிடைப்பதில்லை.

**தீர்வு என்ன?**

அரசாங்கம் வெறும் 'கட்டுப்பாட்டு விலையை' அறிவிப்பதோடு தனது கடமை முடிந்ததாகக் கருதக்கூடாது.

- நெல் சந்தைப்படுத்தல் சபை மற்றும் கூட்டுறவுத் திணைக்களங்கள் ஊடாகக் காலதாமதமின்றி விவசாயிகளிடமிருந்து நேரடியாக நெல்லைக் கொள்வனவு செய்யவேண்டும்.
- விவசாயிகள் அவசரப்பட்டு நெல்லை விற்காமல் இருக்க, கிராமிய மட்டங்களில் உலர்தளங்கள் மற்றும் பாதுகாப்பான களஞ்சிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும்.
- சந்தை விலைஸ்யச் செயற்கையாகத் தீர்மானிக்கும் மாபியாக்களைக் கட்டுப்படுத்த முறையான சட்டப் பொறிமுறைகள் தேவை.

அபிவிருத்தி என்பது கொழும்பில் உயர்ந்து நிற்கும் கட்டடங்களில் இல்லை; அது வவுனியாவிலும் கிளிநொச்சியிலும் உள்ள விவசாயியின் கையில் தங்கும் வருமானத்தில்தான் இருக்கிறது. இடைத்தரகர்களின் சுரண்டல் வலைகளை அறுக்காதவரை, 2026 அல்ல... எத்தனை ஆண்டுகள் பிறந்தாலும் விவசாயியின் வாழ்வில் வசந்தம் என்பது வெறும் எட்டாக்கனியாகவே இருக்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையின் வட மாகாணத்தில் பாடசாலை மாணவர்கள் மத்தியில்

# தலைமைத்துவத் திட்டத்தை அறிமுகப்படுத்துவதன் முக்கியத்துவம்!

● கலாநிதி செ.ஞானசேகரன்

(மாணவ தலைமைத்துவப் பயிற்சியாளர், கல்வி ஆலோசகர், கல்வி ஆய்வாளர் ஐக்கிய அமெரிக்கா)



இலங்கைப் பாடசாலைகளில் உள்ள தற்போதைய தலைமைத்துவத் திட்டங்கள், குழுப்பணி, தொடர்புத்திறன் மற்றும் அடிப்படை ஒழுங்கமைப்புத்திறன் போன்ற ஒரு சில அடிப்படைத் திறன்களை மாத்திரமே மாணவர்களுக்கு வழங்குகின்றன. மாணவ முதல்வர் பதவிகள்(Prefects), மாணவர் கவுன்சில்கள்(Student council) மற்றும் சில தலைமைத்துவப் பயிற்சிகள் போன்ற செயற்பாடுகள் மாணவர்களுக்குச் சிறிய அளவிலான சூழலில் பொறுப்பும் முடிவு எடுக்கும் அனுபவத்தையும் தருகின்றன. ஆனால், இந்தத் திட்டங்கள் பெரும்பாலும் மட்டுப்படுத்தப்பட்டவையாகவும், பாடசாலைகளுக்கிடையே வித்தியாசம் நிறைந்தவையாகவும் இருக்கும் கிராமப்புற அல்லது போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளுடன் ஒப்பிடும்போது, நகர்ப்புறப் பாடசாலைகள் மாணவர்களுக்கு அதிக வாய்ப்புகளை வழங்கிவருகின்றன. இதனால் பல மாணவர்கள் மூலோபாயச் சிந்தனை, அழுத்தத்தில் பிரச்சினைகளைத் தீர்க்கும் திறன் மற்றும் நீண்டகால திட்டமிடல் போன்ற ஆழமான தலைமைத்துவத் திறன்களை வளர்க்கும் கட்டமைக்கப்பட்ட பயிற்சியை தொடர்ந்து பெறமுடியாதுள்ளனர்.

தற்போதைய முயற்சிகள் மாணவர்களுக்கு அடிப்படையான தலைமைப் பண்பு அனுபவத்தை வழங்கினாலும், அவை முறையான வழிகாட்டல், பாடத்திட்டம் மற்றும் உண்மையான சூழலில் தலைமைத்திறனை நடைமுறைப்படுத்தும் வாய்ப்புகளை வழங்குவதில்லை. மாணவர்கள் பெரும்பாலும் குடியியல் பொறுப்பு, சமூகச் சிக்கல் தீர்வு போன்ற செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கான வாய்ப்புகளைப் பெறமுடியவில்லை. இது எதிர்காலத் தலைவர்களை உருவாக்குவதற்கு மிகவும் முக்கியமானது. மேலும், தற்போதைய திட்டங்கள் போர்ப்பின்னணியில் இருந்து மீண்ட பகுதிகளில், பயிற்சியாளர் மன நிலைத்தன்மை, சீரான இணக்கம் மற்றும் உள்ளடக்கமான சிந்தனை ஆகியவற்றை போதுமானளவில் வளர்க்கவில்லை. இந்தத் திட்டங்களை விரிவுபடுத்தி, முழுமையான தலைமைத்துவப் பயிற்சி, தொடர்ச்சியான வழிகாட்டல் மற்றும் திட்ட அடிப்படையிலான கற்றல் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தினால், மாணவர்களைக் கல்வி, சமூக மற்றும் தொழில்முறை முன்னேற்றத்துக்குத் தேவையான தன்னம்பிக்கை, விமர்சனச் சிந்தனைத் திறன்களுடன் சிறந்த முறையில் வளர்க்கமுடியும்.

போர் காரணமாக ஏற்பட்ட நீண்டகாலப் பாதிப்புகளிலிருந்து இன்னும் மீண்டு வரும் மாணவர்களுக்குத் தலைமைத்துவப் பயிற்சிகளை வழங்குவது ஒரு காலத்திற்கேற்ற மாற்றத்தைக் கொண்ட முயற்சியாகும். இடர்பாடுகள், வாய்ப்புகளின் பற்றாக்குறை மற்றும் சமூக-பொருளாதாரச் சவால்கள் நிறைந்த சூழலில் வளர்ந்த பல மாணவர்களுக்கு, ஒரு கட்டமைக்கப்பட்ட தலைமைத்துவத் திட்டம் நம்பிக்கையை உருவாக்கும் சக்தி வாய்ந்த தளமாக அமையும். திறமையான, கருணையுள்ள, முன்னோக்கிய சிந்தனையுள்ள இளைஞர்களை உருவாக்குவதன் மூலம், இந்தத் திட்டம் மாகாணத்தின் எதிர்காலத்தையே மேம்படுத்தும் வல்லமை பெறுகிறது.

வட மாகாணத்தில் தலைமைத்துவத் திட்டத்தை அறிமுகப்படுத்துவதனூடாக மாணவர்களின் ஆளுமை, நிர்வாகத் திறன், சுய நம்பிக்கை போன்ற நல்ல பண்புகளை அவர்களிடத்தில் வளர்க்க முடியும். பல மாணவர்கள் இடம் பெயர்வு, இழப்பு மற்றும் போரின் மன அழுத்தங்களை இன்னும் மனதில் சுமந்துவருகின்றனர். தலைமைத்துவப் பயிற்சியூடாக தொடர்புத்திறன், சுய அறிவு மற்றும் நேர்மறை அடையாளத்தை உருவாக்கும் செயற்பாடுகள் மூலம் வாழ்க்கையை மீண்டும் முன்நோக்கி நகர்த்தத் தேவையான தன்னம்பிக்கையைப் பெறுகின்றனர். இந்த மனஉறுதி அவர்கள் கல்வி, தனிநல வளர்ச்சி மற்றும் எதிர்கால முடிவெடுப்புகளில் முக்கியமான பங்குவகிக்கிறது.

கட்டமைக்கப்பட்ட ஒரு தலைமைத்துவத்திட்டம், மாணவர்கள் தங்களது சுய வளர்ச்சியோடு மட்டுமல்லாமல் சமூக நலனுக்காகவும் பொறுப்புடன் செயற்படக் கற்றுக்கொடுக்கின்றது. சமூக சேவைத் திட்டங்கள், மாணவர் வழிகாட்டல் பணிகள் மற்றும் மாணவர்களே முன்னெடுக்கும் செயற்பாடுகள் மூலம், அவர்கள் குழுப்பணி, சேவை மற்றும் குடிமைப் பொறுப்பின் மதிப்பை உணர்கிறார்கள். இத்தகைய தலைமைத்திறன்கள், சமூக ஒற்றுமையை மீண்டும் கட்டியெழுப்புவதிலும் நீடித்த சமூக வலிமையை உருவாக்குவதிலும் முக்கியமானவை.

மாணவ தலைமைத்துவத் திட்டம் மாணவர்களிடையே பல்வேறு திறன்களை வளர்த்தெடுக்கின்றது. பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் திறன் (problem solving), முடிவு எடுக்கும் திறன்(Decision making), விமர்சனச் சிந்தனை (critical thinking) மற்றும் பயனுள்ள தொடர்பு போன்ற திறன்கள், வகுப்பறையின் எல்லைகளைத் தாண்டி மாணவர்களின் அறிவை விரிவுபடுத்துகின்றன. மேலும், பொருளாதார முன்னேற்றம் வளர்ச்சியடைந்து வரும் வட மாகாணத்தில் மாணவர்களுக்கு மேம்பட்ட கல்வி வாய்ப்புகளையும் சிறந்த தொழில் வாய்ப்புகளையும் பெற உதவுகின்றன.

வட மாகாணத்தின் போர்ப் பின்னணியில் இருந்து வந்த மாணவர்களுக்கு ஒரு முறையான மாணவத் தலைமைத்துவத் திட்டமானது சமூக ஒற்றுமையையும் நீடித்த சமாதானத்தையும் உருவாக்குவதில் முக்கியமான பங்கு வகிக்கிறது. இணைந்து செயற்படுதல், கலாசாரப் பல்வகைமையை மதித்தல் மற்றும் அமைதியான முறையில் போருக்குத் தீர்வு காணுதல் போன்ற செயற்பாடுகள் மாணவர்களின் மனதில் இருந்த பயங்களையும் பிளவுகளையும் குறைக்க உதவுகின்றன. இத்தகைய இளைஞர்கள் தன்னடக்கமும் கருணையும் கொண்ட தலைவர்களாக உருவாகும் போது, எதிர்கால சமூகத்தில் சமாதானமும் பரஸ்பர மரியாதையும் நிலைநிறுத்தப்படுகின்றன.

வட மாகாணத்தில் மாணவர் தலைமைத்துவத் திட்டத்தை அறிமுகப்படுத்துவது, நவீன அறிவுசார் பொருளாதாரத்திற்குத் தேவையான திறன்களைக் கொண்ட எதிர்கால தொழிற்றுறையை உருவாக்குவதோடு இலங்கைக்கு நீண்டகால பொருளாதார மதிப்பையும் வழங்குகிறது. பிராந்திய முன்னேற்றத்தையும் சமத்துவமான வளர்ச்சியையும் வலுப்படுத்த முயலும் இந்தக் காலத்தில், ஒழுக்கம், புதுமை மற்றும் தலைமைத்திறன் கொண்ட இளைஞர்களை உருவாக்குவது ஒரு முக்கியமான முதலீடாகும். தலைமைத்திறன் பெற்ற மாணவர்கள் உயர்கல்வியைத் தொடரவும், தொழில் முனைவு முயற்சிகளில் ஈடுபடவும், மேம்பட்ட உற்பத்தித்திறன் மற்றும் செயற்றிறனுடன் வேலைவாய்ப்புச் சந்தையில் பங்குபெறவும் அதிக வாய்ப்புப் பெறுகிறார்கள். இது பல ஆண்டுகளாக போரினால் பாதிக்கப்பட்ட வட மாகாணத்தின் பொருளாதார எழுச்சியை மட்டுமல்லாமல், தொழில் வளர்ச்சி, முதலீடுகள் ஈர்ப்பு மற்றும் நிலையான முன்னேற்றத்துக்கு வலுவான போட்டித் திறன் கொண்ட தலைமுறையை உருவாக்குவதன் மூலம், தேசிய பொருளாதார வளர்ச்சியையும் வலுப்படுத்துகிறது.

அரசியல் நோக்கில் பார்க்கும்போது, கட்டமைக்கப்பட்ட ஒரு தலைமைத்துவ முயற்சி இலங்கையின் ஜனநாயக மதிப்புகளையும் நீடித்த நிலைத்தன்மையையும் வலுப்படுத்த உதவுகிறது. விமர்சனச் சிந்தனை, குடிமைப்பொறுப்பு மற்றும் பொறுப்புணர்வான முடிவு எடுக்கும் திறன்களைக் கொண்ட இளைஞர்களை உருவாக்குவதன் மூலம், இந்தத்திட்டம் ஜனநாயகச் செயற்பாடுகளில் விழிப்புணர்வுடன் பங்குபெறச்செய்கிறது. அரசியல் பதற்றமும் அவநம்பிக்கையும் நீண்டகாலம் நிலவிய வட மாகாணத்தில், உரையாடல், இணைந்த செயற்பாடு மற்றும் அமைதியான ஈடுபாட்டை மதிக்கும் தலைமுறையை உருவாக்குவது, சமூக ஒற்றுமைக்கான வலுவான அடித்தளத்தை அமைக்கிறது. இத்தகைய அதிகாரமளிக்கப்பட்ட இளைஞர்கள் தீவிரவாதச் சிந்தனைகளுக்கு அல்லது அரசியல் தவறான பயன்படுத்துதலுக்கு ஆளாகாமல், வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல் மற்றும் நல்லாட்சியை ஊக்குவிக்கும் தலைவர்களாக உருவாகின்றனர். இறுதியில், இந்த முயற்சி நீடித்த சமாதானம், நல்லாட்சி மற்றும் சமமான தேசிய முன்னேற்றத்தை ஆதரிக்கும் அரசியல் முதிர்ச்சியுள்ள குடிமக்களை உருவாக்க உதவுகிறது.

மொத்தத்தில், வட மாகாணத்தில் பாடசாலை மாணவர் தலைமைத்துவத் திட்டத்தை அறிமுகப்படுத்துவது, மன உறுதியும் திறமையும் சமூகப் பொறுப்புணர்வும் கொண்ட ஒரு புதிய தலைமுறையை உருவாக்கும் வலுவான முயற்சியாகும். நம்பிக்கையை வளர்த்து, எதிர்கால வாய்ப்புகளை விரிவுபடுத்தி, மோதலிலிருந்து மீண்டுவரும் சமூகத்தில் ஒற்றுமையை ஊக்குவிப்பதன் மூலம் ஒரு நீடித்த முன்னேற்றத்தை உருவாக்கும் திறன் பெற்றது. இம்மாணவர்கள் கருணையுடனும் திறமையுடனும் கூடிய தலைவர்களாக வளரும்போது, அவர்கள் தமது சமூகங்களின் முன்னேற்றத்திற்கும் மாகாணத்தின் நீண்டகால சமாதானத்திற்கும் முக்கியமான பங்களிப்புகளை வழங்குவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பட்டாசுக் கலாசாரமும் பேரழிவுகளும்

ஆதம்பாவா பாத்திமா சாஜிதா

இலங்கையின் பாரம்பரியக் கொண்டாட்டங்களில் பட்டாசு என்பது ஒரு தவிர்க்கமுடியாத அங்கமாகிவிட்டது. தீயசக்திகளை விரட்டவும், மகிழ்ச்சியைப் பறைசாற்றவும் ஒரு குறியீடாகத் தொடங்கிய இந்தப் பழக்கம், இன்று ஒரு ஆபத்தான பொழுதுபோக்காக உருவெடுத்துள்ளது. மத்தாப்புகளின் ஒளியிலும், பட்டாசுகளின் சத்தத்திலும் நாம் தொலைத்துக்கொண்டிருக்கும் ஆரோக்கியம் பற்றிச் சிந்திக்கவேண்டிய தருணம் இது.

**புள்ளிவிவரங்கள் சொல்லும் அதிர்ச்சி உண்மைகள்**

பட்டாசு வெடிப்பதை ஒரு வீரச்செயலாகக் கருதும் இளைஞர்களும், ஆர்வத்துடன் அணுகும் சிறுவர்களும் சில வினாடி வேடிக்கைக்காக வாழ்நாள் முழுவதையும் இருளில் கழிக்க நேரிடுகிறது. கடந்தகாலத் தரவுகளின்படி, பட்டாசு விபத்துகளால் பாதிக்கப்படுபவர்களில்,

● 45% பேர் தங்கள் கைகளையும் விரல்களையும் இழக்கின்றனர் அல்லது காயமடைகின்றனர்.

● 17% பாதிப்புகள் கண்கள், முகம் மற்றும் தலைப்பகுதிகளில் ஏற்படுகின்றன.

மிகவும் கவலைக்குரிய விடயம் என்னவென்றால், விபத்து ஏற்பட்டவுடன் பதற்றத்தில் செய்யப்படும் தவறான முதலுதவிகள், பாதிப்பின் தீவிரத்தை இன்னும் அதிகமாக்கி விடுகின்றன. சில நேரங்களில் இந்தக் கொண்டாட்டங்கள் மரணத்தில்கூட முடிந்துவிடுகின்றன என்பது கசப்பான உண்மை.

**கிம்புலாபிட்டிய முதல் வடக்கு - கிழக்கு வரை**

இலங்கையின் பட்டாசு உற்பத்தியின் தலைநகராக 'கிம்புலாபிட்டிய' விளங்குகின்றது. இதனைத் தொடர்ந்து ஹோரணை, காலி, கண்டி போன்ற பகுதிகளிலும் பட்டாசுகள் பெருமளவில் தயாரிக்கப்படுகின்றன. ஆச்சரியமான தகவல் என்னவென்றால், தென்னிலங்கையில் உற்பத்தியாகும் இந்தப் பட்டாசுகளுக்கு வட மாகாணத்திலும், அதனைத் தொடர்ந்து கிழக்கு மாகாணத்திலுமே இன்று அதிகப்படியான கேள்வி நிலவுகின்றது.

உற்பத்தி முனையில் போதிய பாதுகாப்பு இன்றிப் பணிபுரியும் தொழிலாளர்கள் முதல், நுகர்வு முனையில் கவனக்குறைவாக இருக்கும் பொதுமக்கள் வரை பட்டாசு என்பது ஒரு 'வெடிக்கக் காத்திருக்கும் எரிமலையாகவே இருந்து வருகின்றது.

**வெற்றிக் குறியீடா? அழிவின் தொடக்கமா?**

ஆரம்ப காலத்தில் தீயவற்றை ஒழிக்கும் நம்பிக்கையாகவும், வெற்றிக்குறியீடாகவும் பயன்படுத்தப்பட்ட பட்டாசுகள், இன்று சுற்றுச்சூழல் மாசடைவதற்கும், முதியவர்கள் மற்றும் நோயாளிகளின் அமைதியைக் குலைப்பதற்கும் முக்கியமான காரணிகளாக மாறியுள்ளன. அத்துடன், செல்லப் பிராணிகள் மற்றும் பறவைகள் இந்த வெடிச்சத்தத்தினால் அடையும் மன உளைச்சல் சொல்லி மாளாது.

**மாற்றத்துக்கான வழி என்ன?**

பட்டாசுக் கலாசாரத்தை முழுமையாக ஒழிப்பது கடினமாக இருக்கலாம், ஆனால் அதன் மீதான அதீத மோகத்தைக் குறைக்கமுடியும்.

● பாடசாலைகள் மற்றும் சமூக அமைப்புகள் ஊடாகப் பட்டாசு விபத்துகளின் கோர முகத்தை மாணவர்களுக்கு விளக்கவேண்டும்.

● பட்டாசு வெடிக்கும்போது நீண்ட திரிகளைப் பயன்படுத்துதல், பாதுகாப்பான இடைவெளியைப் பேணுதல் போன்றவற்றை வலியுறுத்தவேண்டும்.

● சத்தமில்லாத, சுற்றுச்சூழலுக்குப் பாதிப்பு ஏற்படுத்தாத 'பசுமைப் பட்டாசுகளை' (Green Crackers) ஊக்குவிக்கலாம்.

வாழ்க்கை என்பது வாழ்வதற்கே தவிர, ஒரு வினாடி வேடிக்கைக்காக உடல் உறுப்புகளைத் தாரை வார்ப்பதற்கல்ல. பொழுதுபோக்காக இருக்கும் பட்டாசுக் கலாசாரம், எமது வாழ்நாளின் பாரிய வடுவாக மாறிவிடக்கூடாது. பாதுகாப்பான கொண்டாட்டங்களே உண்மையான மகிழ்ச்சியைத் தரும்.




## எழில் இழந்ததேனோ?

இயற்கை எழில் கொஞ்சும்
இலங்கை
அதன் எழிற்கோலமதை
இழந்ததும் ஏனோ...?

டித்வா புயலின்
தாக்கம் ஒரு புறம்
வருண பகவானின்
சீற்றம் மறுபுறம்
மானிட வர்க்கத்தின்
ஒற்றுமையீனம்
மறைந்துபோகும்
பாரம்பரியம்
அழகினைக் கெடுக்கின்ற
பொலித்தீன் பாவனை
இவைகள் அனைத்தும்
சேர்ந்துவிட்டால்
எங்கே நிலைக்கும்
எழிலான கோலம்?

திருமதி தவமணிதேவி
கணேசலிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கதிரியக்க மருந்து உற்பத்தி நிலையம் இலங்கையில் முதன்முறையாகத் திறப்பு

கொழும்பு, பெப்.18

இலங்கையின் மருத்துவத் துறையில் மைல்கல்லாக நாட்டின் முதலாவது சைக்ளோட்ரான் அடிப்படையிலான கதிரியக்க மருந்து உற்பத்தி நிலையம் நீர்கொழும்பு அலுதபொலக பகுதியில் நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சர் பேராசிரியர் கிருஷாந்த அபேசேன தலைமையில் இந்த உற்பத்தி நிலையம் திறந்துவைக்கப்பட்டது.

இந்த நிலையத்தில் புளோரோடி ஆக்ஸிகுளுக்கோஸ் (FDG) போன்ற கதிரியக்க மருந்துகள் உள்நாட்டிலேயே உற்பத்தி செய்யப்படும். இவை புற்றுநோயைக் கண்டறிவதற்கான PET/CT ஸ்கேன் பரிசோதனைகளுக்கு இன்றியமையாதவை.

தற்போது இந்த மருந்துகள் பெரும்பாலும் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றன. இதனால் ஏற்படும் போக்குவரத்துத் தாமதம் மற்றும் கதிரியக்கக் குறைவு காரணமாக மருந்தின் செயற்றிறன் குறைகிறது. உள்நாட்டு உற்பத்தியின் மூலம், மருந்தின் விலை கணிசமாகக் குறைவதுடன், அதிக நோயாளிகளுக்குப் பரிசோதனை செய்ய முடியும்.

நிகழ்வில் உரையாற்றிய அமைச்சர் பேராசிரியர் கிருஷாந்த அபேசேன, "இந்த வசதி எதிர்வரும் தசாப்தங்களில் அணு மருத்துவத் துறையில் இலங்கை ஒரு பெரிய திருப்பு முனையை ஏற்படுத்துவதற்கு வழிவகுக்கும். உள்நாட்டுக் கதிரியக்க மருந்து உற்பத்தி புற்றுநோய் நோயறிதலை மேம்படுத்தும் ஒரு முக்கியமான தேசிய முயற்சியாகும்- என்றார். (ச)

## பணிப்புறக்கணிப்பு எதிரொலி; 1000 வழக்குகள் ஒத்திவைப்பு!

கொழும்பு, பெப்.18

நாடு தழுவிய ரீதியில் நேற்றுமுன்தினம் சட்டத்தரணிகள் முன்னெடுத்த பணிப்பகிஷ்கரிப்பு காரணமாக நீதிமன்ற நாடளாவிய ரீதியில் சுமார் 1,000 வழக்குகள் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படாமல் ஒத்திவைக்கப்பட்டன. அக்குரேகொட பகுதியில் சட்டத்தரணி ஒருவரும் அவரது மனைவியும் படுகொலை செய்யப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தினால் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கமைய உயர்நீதிமன்றம் முதல் நீதவான் நீதிமன்றங்கள் வரை அனைத்து மட்டங்களிலும் சட்டத்தரணிகள் கடமைகளில் இருந்து விலகியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)

## சந்நிதியான் ஆச்சிரம முதல்வருக்கு விருது

யாழ்ப்பாணம், பெப்.18

அகில இலங்கை சைவமகாசபை ஆண்டுதோறும் மகா சிவராத்திரி விரத நாளில் அறிவிக்கப்படும் விருதான அன்பே சிவம் விருது இம் முறை சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகளுக்கு வழங்கப்படவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த பல தசாப்தங்களாக இலங்கையின் நாற்புறங்களிலும் அல்லலுறும் மக்களுக்கு மனிதநேய ஆன்மீகப் பணிகளை அளவுகடந்த வகையில் ஆற்றி வருவதற்காக இந்த விருது வழங்கப்படவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-66)






வரலாற்றுச் சிறப்புமிக்க கீரிமலை நகுலாம்பிகாதேவி சமேத நகுலேஸ்வரர் ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருவிழாவின், 15 ஆவது நாள் மாலை உற்சவமான கொடியிறக்க உற்சவம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மாலை இடம்பெற்றது. (சு-66)


# மரண அறிவித்தல்

## கணபதிப்பிள்ளை சிவஞானசுந்தரம் (செந்தில்)



மண்ணிற்கு 26.10.1953

விண்ணிற்கு 16.02.2026

குடாரப்பு, நாகர்கோவிலை பிறப்பிடமாகவும், புத்தூர்ச்சந்தி, மீசாலையை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை சிவஞானசுந்தரம் (செந்தில்) அவர்கள் கடந்த (16.02.2026) திங்கட்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சுவாமிநாதன் - பொன்னம்மா தம்பதியரின் மருமகனும், சிவமலர் (பாலு) அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், குமாரசாமி, சிறீஸ்கந்தராஜா ஆகியோர்களதும் மனோன்மணி (பளை), முருகையா (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், கலைவாணி (லண்டன்), கஸ்தூரி (லண்டன்), காண்டீபன் (கனடா), கர்ணன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், குகேந்திரன் (குகன்) அகிலேஸ்வரன் (அகிலன்), சுபதா (கௌரி), வினோதினி ஆகியோரின் அன்பு மாமனாரும், சஹானா, சானுஜா, அபிரன், அபிஷ்னன், நியானா, பவிர்ணா, நேஹா, நிதிஷ் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.02.2026) வியாழக்கிழமை மு.ப 11.00 மணியளவில் மீசாலையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

புத்தூர்ச்சந்தி, மீசாலை.

தகவல் : குடும்பத்தினர்

(CS/47071) GD


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அநுர அரசாங்கத்துக்கான ஆதரவு சடுதியாக உயர்வு!

## பொருளாதார நம்பிக்கையும் அதிகரிப்பு

**கொழும்பு, பெப். 18**

**ஜனாதிபதி அநுர தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு, மக்கள் மத்தியில் சடுதியாக ஆதரவு அதிகரித்துள்ளது என்று வெரிட்டே ரிசர்ச் அமைப்பின் ஆய்வில் தெரியவந்துள்ளது.**

'தேசத்தின் மனநிலை' என்ற தொனிப்பொருளில் இந்த ஆய்வு முன்னெடுக்கப்பட்டுள்ளது. இதில் கலந்துகொண்ட மக்களில் 65 வீதமானவர்கள் அரசாங்கத்துக்கு தமது அமோக ஆதரவை வெளிப் படுத்தியுள்ளனர். கடந்த ஒரு வருடத்துக்கு முன்னர் 62 வீதமான மக்கள் அரசுக்கு ஆதரவை வெளிப்படுத்திய நிலையில், தற்போது அந்த ஆதரவு அலை மேலும் அதிகரித்துள்ளது எனக் கூறப் பட்டுள்ளது. அத்துடன், தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கைகள் மிகச் சிறப் பானவை என்றும் ஆய்வில் கலந்துகொண்ட மக்களில் பலர் தெரிவித்துள்ளனர். கடந்த பல வருடங் களில், அரசின் பொருளாதாரக் கொள்கைக்கு மக்கள் வெகுவாக ஆதரவு வழங்கிய முதலாவது சந்தர்ப்பமாக இது அமைந்துள்ளது. ஜனாதிபதி அநுர தலைமையிலான அரசாங்கம் ஊழல் மோசடிகளை ஒழிப்பதில் மிகச் சிறப்பாகச் செயற்பட்டு வருகின்றது. இதுவே தாம் அரசாங்கத்தை ஆதரிப்பதற்குப் பிரதான காரணம் என்று ஆய்வில் கலந்துகொண்ட மக்கள் தெரிவித்துள்ளனர். (ம)


## பெயர் மாற்றம்

தாமரை வீதி, வண்ணார்பண்ணை யாழ்ப்பாணத்தில் வசிக்கும் **வல்லிபுரம் ஜெயசிங்கம்** ஆகிய நான் எனது பெயரை **வல்லிபுரம் இரத்தினசிங்கம்** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **வல்லிபுரம் இரத்தினசிங்கம்** என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு மக்களுக்கு அறியத் தருகின்றேன்.

(CS 31304)A

**வல்லிபுரம் இரத்தினசிங்கம்**

## மரண அறிவித்தல்



### பொன்னையா இராசரத்தினம்

**தோற்றம் 23.09.1945 — மறைவு 16.02.2026**

சிங்கம் லேன், உடுவிலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா இராசரத்தினம் அவர்கள் கடந்த (16.02.2026) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - பாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான ஆசைப்பிள்ளை - சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகனும், பத்மாவதியின் அன்புக் கணவரும், தர்மிலா (ஆசிரியர் - யா/மானிப்பாய் சென்ற் அன்ரனீஸ் றோ.க.த.க.பாடசாலை) பிரதீபன் (அமெரிக்கா), மயூரவதனி (குடும்பநல உத்தியோகத்தர்), அனுஷா (அபிவிருத்தி உத்தியோகத்தர் - பிரதேச செயலகம், உடுவில்), திலீபன் (Brown & Company), துஷ்யந்தி (அபிவிருத்தி உத்தியோகத்தர் - மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், உதயரூபன், பிரியங்கா (அமெரிக்கா), சபேஷ் (ஜேர்மனி), சுகந்தன் (இலங்கை போக்குவரத்துச் சபை - யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், காலஞ்சென்ற வாமதேவன் மற்றும் பாமதேவன் (கனடா), காலஞ்சென்ற பாலதேவன் மற்றும் கெங்காதேவி, சிவமலர், காலஞ்சென்றவர்களான சிறி, மனோகரன் மற்றும் யோகேஸ்வரன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், குலசேகரம் (டென்மார்க்), காலஞ்சென்ற சதாசிவம் மற்றும் மலர் ஆகியோரின் அன்பு மைத்துனரும், சுபஞ்சரி, அஷ்மிகா, அத்வின் (அமெரிக்கா), லோஹித், அக்ஷரன், ஆரத்யா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.02.2026) புதன்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**தகவல்: குடும்பத்தினர்**
**077 658 9593, 077 123 5640**
**சிங்கம் லேன், உடுவில்**

(CS/31302) J-1

## மரண அறிவித்தல்



### முருகேசு காசிநாதன்

நயினாதீவு 3ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு காசிநாதன் அவர்கள் கடந்த 14.02.2026 சனிக்கிழமையன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற ஜெகதீஸ்வரியின் அருமைக் கணவரும், அகிலாவின் பாசமிகு தந்தையும், இராஜேஸ் இன் மாமனாரும், காலஞ்சென்ற தணிகாசலம் மற்றும் துரைரெத்தினம், காலஞ்சென்ற நாகலெட்சுமி, மற்றும் மகேஸ்வரன், தேவராசா, வசந்தராசா, விஜயலெட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரரும், சந்திரகாந்தி, சகுந்தலாதேவி, ஜெயலெட்சுமி காலஞ்சென்ற புஸ்பராணி மற்றும் வரதராஜா, நந்தகுமார் ஆகியோரின் மைத்துனரும், சிவகாமச்சுந்தரி, விஜயலெட்சுமி, வாமதாசன், ஜெயலெட்சுமி, காலஞ்சென்றவர்களான கலாநந்தி, குணரெத்தினம் மற்றும் ஜெயராஜ், உருத்திரன், சபாநாதன் ஆகியோரின் அன்புச் சகலனும், பிரணயாவின் ஆருயிர் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.02.2026) வியாழக்கிழமை காலை 8.00 மணிக்கு அவரின் சகோதரியின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நயினாதீவு சல்லிபரவை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**3ஆம் வட்டாரம், நயினாதீவு,**
**071 6691 409 - மைத்துனர்**
**0047 9420 6364 - மகள்**

**தகவல்: குடும்பத்தினர்**

## நினைவஞ்சலி

**முதலாம் ஆண்டு நினைவஞ்சலி — ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி**



அமரர்
குமாரசாமி சின்னத்தம்பி
தோற்றம் 07.01.1932 — மறைவு 01.03.2025



அமரர்
சரஸ்வதி குமாரசாமி
தோற்றம் 03.05.1933 — மறைவு 30.01.2021

**கண் முன்னே வாழ்ந்த காலம்**
**கனவாகிப் போனாலும்**
**எங்கள் முன்னே உங்கள் முகம்**
**எந்நாளும் உயிர் வாழும்**
**மண் விட்டு மறைந்து நீங்கள்**
**விண் நோக்கிச் சென்றாலும்**
**கண் விட்டு மறையாமல் எம் வாழ்நாள்**
**முழுவதும் எம் மனதில் இருப்பீர்கள்**

**அமரர் திரு சி. குமாரசாமி அவர்களின் 1ம் ஆண்டு ஆத்ம சாந்தி பூசைகள் அன்னாரின் இல்லத்தில் 19.02.2026 அன்று இடம்பெற உள்ளதால் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்க வேண்டுகிறோம்.**

சரவணை மேற்கு,
3ம் வட்டாரம், வேலணை.
(சின்னமடு பாடசாலைக்கு அருகில்)

என்றும் நீங்கா நினைவுகளுடன்
குடும்பத்தினர் மற்றும்
உறவினர்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவில் துப்பாக்கிச்சூடு; மூவர் உயிரிழப்பு

நியூயோர்க், பெப்.18
அமெரிக்காவில்ஹொக்கிவிளையாட்டில் ஈடுபட்டிருந்தவர்கள் மீது நடந்த துப்பாக்கிச்சூட்டில் மூவர் உயிரிழந்துள்ளனர்.
அமெரிக்காவின் ரோட் தீவு மாநிலத்தில் இளைஞர்கள் ஹொக்கி விளையாடிக்கொண்டிருந்தபோது, மர்ம நபரொருவரால் திடீரென சரமாரியாக துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது. இதில் அந்தநபர் உட்பட 3 பேர் உயிரிழந்ததுடன், மேலும் மூவர் படுகாயமடைந்துள்ளனர். துப்பாக்கிச்சூடு நடத்திய நபர் மற்றும் உயிரிழந்தவர்களின் விவரங்களை வெளியிட அதிகாரிகள் மறுத்துள்ளனர். (ஏ-இ)

## கூட்டணியாகவே அடுத்த தேர்தல்!
### ஐ.தே.க. உறுதி

கொழும்பு, பெப். 18
எதிர்வரும் தேர்தலை ஐக்கிய தேசியக் கட்சியும், ஐக்கிய மக்கள் சக்தியும் இணைந்து கூட்டணியாகவே எதிர்கொள்ளும் என்று ஐ.தே.கவின் பிரதி செயலாளரும், முன்னாள் அமைச்சருமான ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி என்பவற்றுக்கு இடையிலான கூட்டணிப் பேச்சுவார்த்தை எதிர்வரும் ஏப்ரல் மாதம் இறுதி செய்யப்படும். கூட்டணியாகவே அடுத்த தேர்தலை எதிர்கொள்வோம். அதற்குரிய நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.
ஐக்கிய மக்கள் சக்தி இணைவுக்கு தாமதப்படுத்தினால் அது அந்தக் கட்சிக்கே பாதகமாக அமையும். இணைவுக்குரிய பேச்சு நடக்கும் போது அடுத்த ஜனாதிபதி வேட்பாளருக்குரிய உத்தரவாதத்தைக் கோரினால் கலந்துரையாடல் முறிவடையலாம். ஏனெனில் ஜனாதிபதி வேட்பாளருக்குரிய தகைமையை செயலில் காண்பிக்க வேண்டும் - என்றார். (அ-ம-44)

## மாகாணத்...

ரில்வின் சில்வா தலைமையிலான குழுவினர் அண்மையில் இந்தியாவுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டனர். அங்கு பேசப்பட்ட விடயங்கள் தொடர்பில் அவர் ஊடகங்களிடம் நேற்றுக் கருத்துத் தெரிவித்துள்ளார். இதன்போதே, மாகாணசபைத் தேர்தல்கள் தொடர்பில் இந்தியா எந்தவொரு பேச்சுவார்த்தையும் நடத்தவில்லை எனக் கூறியுள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
இந்தியப் பயணத்தின்போது இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கரைச் சந்தித்தோம். அத்துடன் குஜராத், கேரள மாநிலங்களுக்குச் சென்று அந்தந்த மாநில முதல்வர்களுடன் கலந்துரையாடல்களை நடத்தினோம். இந்தச் சந்திப்புக்கள் எவற்றிலும் மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் பேசப்படவில்லை. மாறாக, அபிவிருத்தி தொடர்பில் மட்டுமே கவனம் செலுத்தப்பட்டது.
மாகாணசபைத் தேர்தலை நடத்த முடியாது என நாம் கூறவில்லை. அந்தத் தேர்தலை நடத்தும் நிலைப்பாட்டிலேயே உள்ளோம். ஆதலால் இந்த விடயங்கள் தொடர்பில் இந்தியா எம்முடனோ அல்லது நாம் இந்தியாவுடனோ கலந்துரையாட வேண்டிய அவசியம் எழவில்லை.
இலங்கையில் அரசியல் எதிர்காலம் இல்லாமல், வங்குரோத்து நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள நபர்களே நாம் இந்தியாவுடன் இரகசிய ஒப்பந்தங்களில் ஈடுபட்டுள்ளோம் என கட்டுக்கதைகளைப் பரப்பி வருகின்றனர். அவர்களின் பொய்களை நம்பும் நிலையில் மக்கள் இல்லை என்பதே உண்மை - என்றார். (அ-ம-44)

## சுண்டிக்குளம்...

பெப்ரவரி மாதம் 18ஆம் திகதி வடமராட்சி சுண்டிக்குளம் தொடுவாய் வாய்க்கால் பகுதியில் ஸ்ரீலங்கா கடற்படையினர் மேற்கொண்ட தாக்குதல்களில் பலர் கொல்லப்பட்டனர். இந்தப் படுகொலைகளின் 22ஆவது நினைவேந்தல் நிகழ்வே கட்டைக்காட்டிலுள்ள சென். மேரிஸ் விளையாட்டு மைதானத்தில் இன்று கடைப்பிடிக்கப்படவுள்ளது. (அ-ம-66)

## யாழ்...

யின் கீழ் கோர வேண்டும் என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.
யாழ்ப்பாணம் மாநகரசபையின் மாதாந்த அமர்வு மேயர் மதிவதனி தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதன்போது, யாழ்ப்பாணம் கோட்டைப் பகுதியில் புதிய கட்டுமானங்களை அமைப்பதற்குத் தடை விதிக்க வேண்டும் என்று உறுப்பினர் மதுசிகான் பிரேரணையைக் கொண்டுவந்தார்.
இதன்போது, முற்றவெளிப் பகுதியை தொல்பொருள் திணைக்களத்திடம் இருந்து யாழ்ப்பாணம் மாநகரசபையின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவருவதற்கு சபை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று உறுப்பினர் மயூரன் கோரிக்கை விடுத்தார். இந்தக் கோரிக்கைகள் சபையால் ஏற்கப்பட்டு தீர்மானமாக நிறைவேற்றப்பட்டன. (அ-ம-26)

## சாவு...

மரண வீட்டுக்குச் சென்ற வயோதிபப் பெண்ணொருவர், அங்கு திடீர் சுகவீனமுற்று மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில், மேலதிக சிகிச்சையின்போது உயிரிழந்தார்.
யாழ்ப்பாணம் அளவெட்டியைச் சேர்ந்த கந்தையா சூரியமலர் (வயது-76) என்ற வயோதிபப் பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.
உறவினரின் மரண வீட்டுக்கு நேற்று முன்தினம் சென்ற அவர், அங்கு தனது மகளின் மடியில் மயங்கிச் சரிந்துள்ளார். இதையடுத்து அவர் உடனடியாக மீட்கப்பட்டு சங்கானை மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார். பின்னர் அங்கிருந்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்ட நிலையில் மேலதிக சிகிச்சையின்போது நேற்று உயிரிழந்தார்.
இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமச்சிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26)

## இருதய...

இருதயம் மற்றும் நுரையீரலில் ஏற்பட்ட நோய் காரணமாக பெண் குழந்தையொன்று உயிரிழந்துள்ளது.
யாழ்ப்பாணம் நுணாவில் பகுதியைச் சேர்ந்த என்ற ஏழு மாதப் பெண் குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.
இருதய நோயாலும், நுரையீரல் நோயாலும் அந்தக் குழந்தை அவதிப்பட்டுவந்த நிலையில் மேலதிக சிகிச்சைகள் பயனளிக்காமல் உயிரிழந்துள்ளது.
இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமச்சிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26)

## ஒருவழிப்...

இதை முன்னிட்டே இராமநாதன் வீதியின், கலட்டி சந்தி முதல் பரமேஸ்வரா சந்தி வரையான பகுதி ஒருவழிப் பாதையாக மாற்றப்பட்டுள்ளது. இந்த நடைமுறை காலை 8 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை அமுலில் இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம-26)

## விபத்தில்...

மேலதிக சிகிச்சையின்போது நேற்று உயிரிழந்தார்.
யாழ்ப்பாணம் - சுன்னாகம் பகுதியைச் சேர்ந்த சுந்தரலிங்கம் சுகிர்தர் (வயது-48) என்ற குடும்பத் தலைவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.
சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது: கடந்த 14ஆம் திகதியன்று பலாலி வீதியில் மோட்டார்சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்தபோது பிறிதொரு மோட்டார்சைக்கிளுடன் அவர் விபத்துக்கு உள்ளாகியுள்ளார். படுகாயம் அடைந்த அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் மேலதிக சிகிச்சையின்போது நேற்று உயிரிழந்தார். இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமச்சிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26)

## கொலை...

கொலை அச்சுறுத்தல் விடுத்தமை, பொலிஸாரின் கடமைக்கு இடையூறு ஏற்படுத்தியமை, கொள்ளைகளில் ஈடுபட்டமை உள்ளிட்ட குற்றங்களுடன் தொடர்புடைய நபருக்கு, கிளிநொச்சி மேல் நீதிமன்றம் ஐந்து ஆண்டுகால கடூழியச் சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது.
முல்லைத்தீவு மாங்குளம் பகுதியில் கடந்த 2022ஆம் ஆண்டு மே மாதம் 8ஆம் திகதி, நபரொருவர் ஓட்டோ சாரதியை கத்திமுனையில் அச்சுறுத்தி அவருடைய ஓட்டோவை கடத்தியிருந்தார். அத்துடன், பொலிஸாரின் கட்டளையை மீறிப் பயணித்தமை, பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் மீது ஓட்டோவால் மோதி படுகாயங்களை ஏற்படுத்தியமை போன்ற குற்றச்சாட்டுக்களும் அவர் மீது சுமத்தப்பட்டிருந்தன. இதையடுத்து, அவர் கைது செய்யப்பட்டு, அவருக்கு எதிரான வழக்கு கிளிநொச்சி மேல் நீதிமன்றில் முன்னெடுக்கப்பட்டு வந்தது.
இந்த வழக்கு கிளிநொச்சி மேல் நீதிமன்ற நீதிபதி ஏ.ஜி.அலெக்ஸ்ராஜா முன்னிலையில், நேற்றுத் தீர்ப்புக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போதே குறித்த நபருக்கு ஐந்து ஆண்டுகால சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பு வழங்கப்பட்டது. அத்துடன், பாதிக்கப்பட்ட ஒருவருக்கு 3 லட்சத்து 50 ஆயிரம் ரூபா இழப்பீடும், மற்றையவருக்கு 5 லட்சம் ரூபா இழப்பீடும் செலுத்த வேண்டும். தவறினால் முறையே, ஒரு வருட சிறைத் தண்டனையும், இரண்டு வருடகால சிறைத்தண்டனையையும் கூடுதலாக அனுபவிக்க வேண்டும் என்றும் நீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது. (அ-ம-55)

## பிரிட்டனின்...

தெரிவித்தார். பிரிட்டனின் துணைப் பிரதமர் டேவிட் லாமி இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ளார். அவருடன் கலந்துரையாடிய விடயங்கள் தொடர்பில், வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவித்துள்ளார். இதன்போதே, ஸ்ரீலங்கா இராணுவத்தினர் மீது பிரிட்டனால் விதிக்கப்பட்ட தடைகள் தொடர்பில் பேச்சு நடத்தப்படவில்லை என்று கூறியுள்ளார்.
அமைச்சர் விஜித ஹேரத் மேலும் தெரிவித்ததாவது:-
இலங்கைக்கும் பிரிட்டனுக்கும் இடையிலான பரஸ்பர ஒத்துழைப்பை மேலும் மேம்படுத்தும் வகையில் இந்தப் பேச்சுவார்த்தையில் கவனம் செலுத்தப்பட்டது.
குறிப்பாக ஆடை ஏற்றுமதிகள் மற்றும் பிற ஏற்றுமதிகள் தொடர்பில் இரண்டு நாடுகளின் குழுவினரும் நீண்ட நேரம் ஆலோசனைகளை நடத்தினார்கள்.
இலங்கையின் கடன் மறுசீரமைப்புப் பணிகளுக்கு பிரிட்டன் மிகச் சிறந்த முறையில் ஒத்துழைப்பு வழங்கியது. அத்துடன் டித்வா புயல் காலத்திலும் இலங்கையை பிரிட்டன் வெகுவாகவே ஆதரித்தது. இந்த உதவிகளுக்காக பிரிட்டனின் துணைப் பிரதமர் லாமியிடம், ஜனாதிபதி அநுர தனது நன்றியை தெரிவித்தார் - என்றார். (அ-ம-44)

## ஓய்வூதியத்தை...

நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஓய்வூதியத்தை நீக்கும் சட்டவரைவு ஜனாதிபதி அநுர தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தால் முன்வைக்கப்பட்டிருந்த நிலையில், அது நீதிமன்றத்தில் சவாலுக்கு உட்படுத்தப்பட்டது.
சமர்ப்பணங்களை ஆராய்ந்த நீதிமன்றம், நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஓய்வூதியத்தை நீக்கும் சட்டவரைவு அரசியலமைப்புக்கு முரணானது அல்ல என்று சபாநாயகருக்கு தனது நிலைப்பாட்டை அறிவித்திருந்தது. இதையடுத்து, இந்தச் சட்டவரைவின் மீதான விவாதமும் வாக்கெடுப்பும் நேற்று நடைபெற்றன. இதன்போது 154:02 என்ற அடிப்படையில் 152 மேலதிக வாக்குகளால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (அ-ம-44)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# எரிசக்தி கட்டமைப்பின் மீது உக்ரைன் ட்ரோன் தாக்குதல்



மொஸ்கோ, பெப்.18

ரஷ்ய எரிசக்தி உள்கட்டமைப்பை இலக்கு வைத்து உக்ரைன் ட்ரோன் தாக்குதலை மேற்கொண்டுள்ளது என்று தெரிவிக்கப் படுகின்றது.

ரஷ்யாவின் கிராஸ்னோடர் பகுதியில் உள்ள இல்ஸ்கி சுத்திகரிப்பு நிலையத்தை இலக்குவைத்து ட்ரோன் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். அதில் எரிபொருள் சேமித்து வைக்கப்பட்டிருந்த கொள்கலன் ஒன்று சேதமடைந்துள்ளது என்று கூறப்படுகின்றது.

அதேவேளை, ரஷ்யக் கட்டுப்பாட்டில் உள்ள கிரிமியாவின் சில பகுதிகளை உக்ரைன் ட்ரோன்கள் இலக்கு வைத்து தாக்குதல் நடத்தியது என்றும், ஒரே இரவில் 151 ட்ரோன்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன என்றும் ரஷ்யா தெரிவித்துள்ளது. (எ-இ)

## இஸ்ரேலுக்குச் செல்கிறார் இந்தியப் பிரதமர் மோடி

புதுடில்லி, பெப்.18

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, தனது மூன்றாவது ஆட்சிக்காலத்தின் முதல் பயணமாக எதிர்வரும் 27 மற்றும் 28 ஆகிய திகதிகளில் இஸ்ரேலுக்கு உத்தியோகபூர்வ பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

சுமார் 9 ஆண்டுகளுக்குப் பின்னர் அவர் மேற்கொள்ளும் இந்தப் பயணம், இரு நாடுகளுக்கு இடையிலான உறவில் ஒரு புதிய மைல்கல்லாகப் பார்க்கப்படுகிறது.

இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவின் அழைப்பின் பேரில் இந்தப் பயணம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இருவரும் பாதுகாப்பு, விவசாயம் மற்றும் பயங்கரவாத எதிர்ப்பு ஆகிய துறைகளில் ஒத்துழைப்பை அதிகரிப்பது தொடர்பில் விரிவாகக் கலந்துரையாட உள்ளனர்.

இந்தப் பயணத்தில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் முன்னெடுத்துள்ள காசா அமைதித் திட்டத்தின் நடைமுறையாக்கம் தொடர்பில் நெதன்யாகு, நரேந்திர மோடிக்கு விளக்கமளிக்கவுள்ளார்.

இந்தியா மற்றும் இஸ்ரேல் இடையே நீண்டகாலமாக இழுபறியில் உள்ள சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தை விரைவுபடுத்துவது இந்தப் பயணத்தின் முக்கியமான இலக்குகளில் ஒன்று என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)



## சமரசம் செய்வதற்கு ஈரான் அமெரிக்காவுக்கு நிபந்தனை

ஜெனிவா, பெப்.18

தங்கள் மீது விதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத் தடைகளை அமெரிக்கா நீக்கினால், அணுசக்தித் திட்டம் தொடர்பில் பேச்சு நடத்தி சமரசம் செய்யத் தயார் என்று ஈரான் தெரிவித்துள்ளது. ஈரான், அமெரிக்கா இடையிலான இரண்டாம் சுற்றுப்பேச்சுகள் ஜெனிவாவில் நடைபெறவுள்ள நிலையில், ஈரான் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது. ஈரானின் இந்த அறிவிப்பால் இரண்டாம் கட்டப் பேச்சுகளில் ஏதேனும் முன்னேற்றகரமான நகர்வுகள் நடப்பதற்கு வாய்ப்புகள் ஏற்படலாம் என்று சர்வதேச அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர். (எ-இ)



நீர்வேலி கந்தசுவாமி ஆலயத்தில் மகா சிவராத்திரியை முன்னிட்டு, முதலாம் சாமப்பூசையைத் தொடர்ந்து சுவாமி வீதி வலம் இடம்பெற்றது. (சு-17)

## சிறையிலுள்ள இம்ரான் கானின் பார்வை பறிபோகும் அபாயம்!

இஸ்லாமாபாத், பெப்.18

ஊழல் வழக்குகளில் சிக்கி சிறையிலுள்ள பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கானின் உடல்நிலை தொடர்பாகக் கவலையளிக்கும் தகவல்கள் வெளியாகியுள்ள நிலையில், அவரைப் புதிய சிறைக்கு மாற்ற பாகிஸ்தான் அரசு முடிவு செய்துள்ளது.

2023ஆம் ஆண்டு முதல் ராவல்பிண்டி அடியாலா சிறையில் அடைக்கப்பட்டுள்ள இம்ரான் கானுக்கு, வலது கண்ணில் கடுமையான பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்று அவரது வழக்கறிஞர் உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார்.

இரத்த உறைவு காரணமாக இம்ரான் கானுக்கு வலது கண்ணில் 15 சதவீத பார்வை மட்டுமே உள்ளது. சிறை அதிகாரிகள் முறையான சிகிச்சையளிக்காததால் அவரது 85 சதவீத பார்வை பறிபோய்விட்டது என்று அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மனுவைப் பரிசீலித்த நீதிமன்றம், இம்ரான் கானின் உடல்நிலையை ஆய்வு செய்ய சிறப்பு மருத்துவக்குழுவை அமைக்க உத்தரவிட்டுள்ளது. இதுதொடர்பில் கருத்துத் தெரிவித்த பாகிஸ்தான் உள்துறை அமைச்சர் மோஷின் நக்வி, இம்ரான் கான் விரைவில் இஸ்லாமாபாத் சிறைக்கு மாற்றப்படுவார் எனத் தெரிவித்துள்ளார். அதேவேளை, இம்ரான் கானுக்கு உரிய சிகிச்சை அளிக்கப்படவில்லை எனக் குற்றஞ்சாட்டி, அவரது கட்சியினர் மற்றும் எதிர்க்கட்சிகள் பாகிஸ்தான் நாடாளுமன்றம் அருகே உள்ளிருப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். அவர்கள் இம்ரான்கானை உடனடியாக மருத்துவமனையில் சேர்க்க வேண்டும் என்று வலியுறுத்தி வருகின்றனர். (எ-இ)

**ENGLISH CLASSES**
தனியாகவும் மற்றும் குழுவாகவும் அல்லது Zoom மூலமும் உங்கள் வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும்.
**Gr 1 to O/L**
* Grammar with Spoken
* School Syllabus
T.P: 077 33 14 608
(CS 31305) A

**பணியாளர்கள் தேவை**
யாழ்நகரப் பகுதியில் கட்டட நிர்மாணப் பணிக்காக அனுபமுள்ள பெயிண்டர் மற்றும் தச்சர் (Carpenter) ஆகிய பணியாளர்கள் தேவை.
♦ தினரி ஊதியம் வழங்கப்படும்
♦ தினமும் 2 வேளை உணவு வழங்கப்படும்
♦ அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
தொடர்புகளுக்கு: 076 624 8529
(CS 6060773) N-1



கொக்குவில் மேற்கு வராகி சனசமூக நிலையத்தினரும் இந்து இளைஞர் மன்றத்தினரும் இணைந்து அண்மையில் சிவராத்திரி விழாவை நடத்தியிருந்தனர். மிகச் சிறந்த முறையில் இந்த விழா இடம்பெற்றது. (ம-40)

**காணி விற்பனைக்கு உண்டு**
யாழ்ப்பாணம் இளந்தைக்குளம் வீதியில் 1 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
● மாம்பழச் சந்தியிலிருந்து 350m தூரம்.
● ஒரு பரப்பின் விலை 48 லட்சம்
தொடர்பு:
076 860 2770
076 987 8617
(CS 31303) A

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்: advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 18.02.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org